
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



சக்கரத்தை எடுப்பதொருகணம் தருமம் வாழ்வில் தழைத்தல் மறுகணம்
திக்கெலாம்புகழ் சக்கரத்தாழ்வார் திருமோகூரில் காட்சியளிக்கிறார்
மிக்கதுன்பம் பிணி பகை மாறிடும் விளங்கிடாத செய்வினை போய்விடும்
தக்கவர்புகழ் திருமாலேந்திய சக்கரத்தை வணங்குவம் வாரீர்.

அக்டோபர் 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 9

சுக்ல
புரட்டாசி

அக்டோபர்
1989

ஓராதே அஞ்செழுத்தும் உன்னுதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே— யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்
—பட்டினத்துப் பிள்ளையார் (திருவிடை மருதூர் மும்மணிக் கோவை)


ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி.
மதுரை-625 001
தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00



சோழபுரத்தில் குடநீராட்டு விழா!

பசும்பொன் தேவர் திரு மகன் மாவட்டம், சிவகெங்கை வட்டம், சிவகெங்கை-திருப்புத் தூர் சாலையில் சிவகெங்கையிலி ருந்து ஆறு கி. மீ. தொலைவில் இருப்பது சோழபுரம். இங்கு அமைந்து அருள் பாலித்து வரும் அருள்மிகு அறம் வளர்த்த நாயகி அம்மன் உடனுய அருள்மிகு அருள்மொழி நாதப் பெருமானுக் கும் பரிவார மூர்த்திகளுக்கும் திருப்பணி செய்யப் பெற்று சுக் கில ஆண்டு ஆவணித் திங்கள் 25 ஆம் நாள் (10-9-89) ஞாயி றன்று அதிகாலை 6-00 மணி அள வில் திருக்குட நன்னீராட்டு சிறப்புற நடைபெற்றது. இத் திருக்குட நன்னீராட்டு விழாவில் சுமார் முப்பதாயிரம்பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(இத்திருக்கோயிலின் திருப் பணியும் குடநீராட்டும் ஏற்கன -வே சுமார் 58 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாகச் சொல் லப்படுகிறது.)

யாக சாலை

இத்திருக்குட நன்னீராட்டை யொட்டி 7-9-89 மாலை முதல் 10-9-89 காலை வரை 6 காலம் யாகசாலைப் பூஜைகள் நடை பெற்றன. சுவாமிக்கு 9 ஓம குண்டங்களும் அம்மனுக்கு 9 ஓம குண்டங்களும் பரிவார தெய்வங் களுக்கு 11 ஓம குண்டங்களும் ஆக 29 ஓம குண்டங்கள் அமைக் கப் பெற்றிருந்தன. சர்வசாதகம் பிள்ளையார்பட்டி டாக்டர் கே. பிச்சைக் குருக்கள் யாகசாலைப் பொறுப்பை ஏற்றுச் சிறப்புறச் செய்திருந்தார்.

கலந்து கொண்டவர்கள்

இக்குடநீராட்டு விழாவில் தவத்திரு திருச்சி சுவாமிகள், தமிழக இந்து அறநிலையத்துறை ஆணையாளர் திரு. வி. இராம தாஸ் துணை ஆணையாளர் திரு. கனகய்யா சிவகெங்கை மன்னர் சண்முகராஜாவின் புதல்வியும் இத்திருக்கோயிலின் காப்பாளரு மான ராஜகுமாரி திருமதி ராஜ லெட்சுமி ரகுராஜ், மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலின்முன்னுள் தக்கார் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் போன்றவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

9-9-89 நிகழ்ச்சிகள்

9-9-89 சனி மாலை 4 மணிக்கு கவிஞர் திரு. இராகவன் முத்து திருமுக விலாசம் பற்றி உரை யாற்றினுர். மாலை 6 மணிக்கு திண்டுக்கல் அங்குவிலாஸ் உரிமை யாளர் திரு. செல்லமுத்து குழு வினரின் மாண்டலின் இன்னிசை யும் இரவு 10 மணிக்கு செவல் குளம் தங்கையா குழுவினரின் 'மீனுட்சி கல்யாணம்' பற்றிய வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றன.

10-9-89 நிகழ்ச்சிகள்

10-9-89 ஞாயிறு காலை 10 மணி அளவில் திருமதி இளம் பிறை மணிமாறன் 'வள்ளி திரு மணம்' பற்றி உபன்யாசம் செய் தார் மாலை 4 மணிக்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலை மையில் கவியரங்கம் நிகழ்ந்தது. சிவபூசகர் திரு. குப. சொக்கலிங் கம் வரவேற்க 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. ''சுந்தரர்'' பற்றியும் முனைவர் திரு. சபா. அருணுசலம் ''திருநாவுக்கரசர்'' பற்றியும் உரையாற்றினர். மாலை 6 மணிக்கு திரைப்பட நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் புதல்வி டி. ஆர். எம். சாவித்திரி இன் னிசை வழங்கினுர். இரவு கர காட்டமும் பஞ்ச மூர்த்திகள்



காளாஞ்சி, மாலை மரியாதையுடன் திருப்பணிக் குழு அறங்காவலர்கள் ஒக்கூர் திரு. வீர. சிந்தாமணி செட்டியார், திரு. கரு. வெள்ளையப்ப செட்டியார், திரு. கரு. ஆதப்ப செட்டியார்.

திருஉலாக் காட்சியும் நடைபெற்றன.

10-9-89 ஞாயிறு காலை 11 மணி அளவில் மகா அபிஷேகமும் இரவு 8 மணி அளவில் திருக்கல்யாணமும் சிறப்புற நடைபெற்றன.

இத்திருக்கோயிலில் நவக்கிரகங்களும் ஸ்ரீ ஐயப்பனும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பாராட்டு

இத்திருக்கோயிலின் திருப்பணி மற்றும் குடநீராட்டை பல இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பாகச் செய்து உதவிய திருப்பணிக் குழு அறங்காலவர்கள் ஒக்கூர் சி. கரு. சி. கரு. சிந. கரு. ஆதப்ப செட்டியார் அவர்கள், சி. கரு. சி. கரு. ஆத. கரு. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள் சி. கரு. சி. கரு. அரு. வீர. சிந்தாமணிச் செட்டியார் அவர்கள் ஆகியோருக்கு சோழபுரம் ஊர் மக்கள் பொன்னாடை போர்த்து பூமாலை சூட்டி வாழ்த்துப் பா வழங்கிச் சிறப்பித்தனர்.

கோயில் வரலாறு

இத்திருக்கோயில் 800ஆண்டுகட்கு முன்னால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழ மன்னன் விக்கிரமன் சோழபுரத்தில் தங்க வேண்டிய சூழ்நிலையில் இக்கோயிலைக் கட்டினான் என்றும்—

சோழ மன்னன் வாய்பேசாத தன் மகளுடன் வந்து தங்கிய போது இந்த கோயில் கொண்டுள்ள அறம் வளர்த்த நாயகியின் அருளால் தன் மகள் பேசும் பேறு கண்ட மன்னன் அம்மனுக்கு இக்கோயிலைக் கட்டித் திருப்பணி செய்து இவ்வூருக்குச் 'சோழபுரம்' எனப் பெயரிட்டுச் சிறப்பித்தான் என்றும்—

செவிவழிச் செய்திகள் கூறு

கின்றன.

ஒக்கூர் சி. கரு. சி. குடும்பத்தாரால் இக்கோயில் திருப்பணி முதலில் தொடங்கி இறுதியில் சி. கரு. சி. கரு. வெள்ளையஞ் செட்டியார் என்ற கருப்பஞ்செட்டியாரால் நிறைவு செய்யப் பெற்று திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. பின்னர் சி. கரு. சி. கரு. அண்ணாமலை செட்டியார், ஆதப்பசெட்டியார் இருவராலும் தற்போதுள்ள 5 நிலைகள் கொண்ட இராஜகோபுரம், திருமதில் திருப்பணிகள் தொடங்கப் பட்டு ஆதப்ப செட்டியார் அவர்களால் நிறைவு செய்யப் பெற்றது.

ஆதப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி சொக்கலிங்கம் ஐயா அவர்களைக் கொண்டு இக்கோயிலுக்குப் தலபுராணம் பாடச் செய்துள்ளார்கள். 525 செய்யுள்கள் கொண்ட அது 60 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப் பட்டுள்ளது.

சிவகெங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த இத்திருக்கோயில் சிவகங்கை மன்னர்கள் பட்டம் கட்டிக் கொள்ளக்கூடிய சிறப்பைப் பெற்றுள்ளது.

இத்திருக்கோயிலின் மண்டலாபிஷேக விழா சுக்கில ஆண்டு ஐப்பசித் திங்கள் 11ஆம் நாள் (27-10-89) வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

துலாவூரில் குரு பூஜை

நகரத்தார் பெண்களின் குரு பீடமான துலாவூரில் 15-10-89 ஞாயிறன்று ஸ்ரீ நிரம்பவழகிய தேசிக பரமாச்சாரிய சுவாமி சந்நிதியில் வழிபாடும் மங்களாம்பிகையுடனுறை வாஞ்சீசுவரப் பெருமானுக்கு ஆராதனைகளும் அன்னதான மகேசுவர பூஜையும் இப்போதைய ஆதீனத் தலைவரின் கொலுவிருக்கைக் காட்சியும் நடைபெற உள்ளன.

15-10-89 காலை 8 மணிக்கு நாதசுரம். 9 மணிக்குத் தேவாரம் 9-30க்கு சொற்பொழிவு. 11-30க்கு அபிஷேக ஆராதனை. பகல் 12-00க்கு நகரத்தார் பெண்களுக்கு உபதேசம். இரவு 7-00க்கு பூஜை. 8-00க்கு ஆதீனத் தலைவர் கொலு வீற்றிருக்கை.

இவ்விழாவில் கண்டனூர் ப. லெட்சுமணன் அவர்களுக்கு 'அறமனச் செம்மல்' பட்டம் வழங்கப் பெற உள்ளது.

குரு பூஜைக்கான ஏற்பாடுகளை அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் அவர்களும் 'காசிஸ்ரீ' அரு. சோ. அவர்களும் செய்து வருகிறார்கள்.

திருமணம்

ஆவினிப்பட்டி விவேகானந்தா கல்விக் கழகம் நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அலவாக்கோட்டையைச் சேர்ந்த சுப. சா. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி பழ. மீனாட்சி B. Com க்கும் நேமத்தான்பட்டி பெ. செ. சொ. கி. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராதாகிருஷ்ணனுக்கும் 3-9-89 அன்று அலவாக்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு திருவாளர்கள் வி. என். சிதம்பரம் செட்டியார், சோம. இயற்பகை செட்டியார், முன்னாள் அமைச்சர் செ. மாதவன் இளையாத்தக்குடி ஜமீன்தார் ஆர். ராஜா மற்றும் அரசு ஊழியர்கள் நண்பர்கள் பெருமளவில் வந்திருந்தனர். வாழ்த்துச் செய்திகள் ஏராளமாக வந்திருந்தன.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்




வி.என்.சிதம்பரம்

—45—

ஹார்ட் பைபாஸ் சர்ஜரி செய்வதில் உலகிலேயே மிகச் சிறந்த டாக்டர் டெண்டன் கூலி. இவர் ஹூஸ்டன் மருத்துவ மனையில்தான் பணியாற்றுகிறார். இந்தியாவிலிருந்து பைபாஸ் சர்ஜரிக்கு ஹூஸ்டனுக்கு செல்பவர்கள் எல்லாம் அங்கு உள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டுத்தான் ஆபரேஷனுக்குச் செல்கிறார்கள். நமது இந்திய முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள் ஆபரேஷனுக்குச் சென்றபோது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து வழிபாடு செய்துவிட்டுத் தான்சென்றார்கள். ஹூஸ்டனில் அவருக்கு ஆபரேஷன் முடிந்ததும் பலர் பார்க்கச் சென்றபோது யாரையும் அனுமதிக்கவில்லை. தங்கபட்டர் ஹூஸ்டன் மீனாட்சி கோவிலிலிருந்து பிரசாதம் எடுத்துக்கொண்டு சென்றபோது படுக்கையை விட்டு எழுந்து நிற்கக்கூடாது. என்று மருத்துவர்கள் சொன்ன போதிலும், கோயில் பிரசாதத்தை படுக்கையிலிருந்து வாங்கிக்கொள்ளக் கூடாதென்று, எழுந்து நின்று வாங்கிக் கொண்டார்களாம்.

1985 ஆம் ஆண்டு ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவிலில் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு 'ஹால்' கட்டியிருந்தார்கள். பொதுவாக அமெரிக்காவில் திறப்புவிழா நடத்துவது. கொடியேற்றுவது முதலிய பழக்கங்கள் எல்லாம் கிடையாது. 1985ம் ஆண்டு வயிரவன் சுப்பிரமணியம் அவர்கள் ஹூஸ்டன் கோவிலில் டிரஸ்டியாக இருந்தார்கள். திரு. வயிரவன் சுப்பிரமணியம் அவர்கள் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சார்ந்தவர்கள். அவர்களது சொந்த ஊர் அரிமளம். மனைவி பெயர்: திருமதி மீனா. நம்மவர்கள் யார் ஹூஸ்டனுக்குச் சென்றாலும் அவர்களை வரவேற்று விருந்தளித்து உபசரிப்பார்கள். ஒரு நாள் அல்லது இரு நாட்கள் அல்லாமல் மாதக்கணக்கில் கூட அவர்களது இல்லத்தில் தங்க வைத்துக் கொள்வார்கள். அப்போது அந்த ஆலயத்தில் தலைமைச் சிவாக்சாரியாராக திரு. ராஜரத்தின பட்டர் பணிபுரிந்து வந்தார். அதுசமயம் நான் சிக்காக்கோவில் இருந்தேன். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தலைவருக்கு சிறப்பு அளிப்பதற்காகவும் நம்மவர் ஒருவரைப் பெருமைப்படுத்தவேண்டுமென்ற நினைப்பிலும் திரு. வயிரவன் சுப்பிரமணியம் அவர்களும், ராஜரத்தின பட்டரும், அங்குள்ள உறுப்பினர்களைக் கலந்து புதிதாகக் கட்டப்பட்ட அந்த ஹாலை அடியேனை அழைத்துத் திறந்து வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு சிக்காக்கோவிற்கு



ஹூஸ்டன் மீனுட்சி அம்மன் கோவிலின் செயலாளர் நாட்டரசன்கோட்டை சொ. கண்ணப்ப செட்டியார் அவர்கள்.

எனக்குத்தொலைபேசி மூலம் தெரிவித்து அழைத்தார்கள். அதைப் பெரும் பாக்கியமாகக் கருதி நானும் எனது மாப்பிள்ளை பெரியகருப்பன் அவர்களும், எங்களது குடும்ப நண்பர் டாக்டர் ராஜேந்திரன் குடும்பத்தினரும் விமானம் மூலம் ஹூஸ்டன் சென்ருேம். வயிரவன் சுப்பிரமணியம் அவர்களும் விமான நிலையத்திற்கு வந்து எங்களை அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்ருர்கள். மறுநாள் காலையில் திறப்புவிழா ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தது. அதில் சுமார் 1000 பேர்கள் கலந்து கொண்டனர். எனக்கு அங்கிருந்தபோது மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் இருந்த உணர்வு ஏற்பட்டது. கோவில் மிக அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. ராஜரத்தின பட்டரும் அவரது இல்லத்திற்கு எங்களை அன்போடு அழைத்து விருந்து கொடுத்தார். அன்று இரவு திரு. வயிரவன் சுப்பிரமணியம் அவர்களது இல்லத்தில் சுமார் 20 நகரத்தார்களும், 50 தமிழர்களும் கூடி விருந்து உண்டனர். திரு. வயிரவன் சுப்பிரமணியம் குடும்பத்தினரையும், திரு. ராஜரத்தின பட்டரையும் மற்றும் அங்குள்ள தமிழர்களையும் மறக்க இயலாது.

மதுரை ஆடிட்டர் பெரி. தியாகராஜ் அவர்கள் ஹூஸ்டனுக்கு ஆபரேஷனுக்குச் சென்றபோது கூட திரு. வயிரவன் சுப்பிரமணியத்தின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க சிறிது நாட்கள் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்திருக்கிருர்கள். திரு. கண்ணப்பன் அப்போது வாஷிங்டனில் இருந்து வந்தார்கள்.

நாங்கள் சென்றிருந்த சமயம் திரு. கண்ணப்பன் அவர்களுடைய சகோதரர்கள் திரு. நாராயணன், திரு. ராதாகிருஷ்ணன் இருவரும் எங்களோடு வயிரவன் சுப்பிரமணியம் இல்லத்திலிருந்து ஊரைச் சுற்றிக் காண்பித்தார்கள். ஹூஸ்டனிலிருந்துதான் சந்திரமண்டலத்துக்கு ராக்கெட்

பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்கள்

திருச்சி நகரத்தார் சங்கம் 14-9-1972 முதல் 30-1-1985 வரை, திருச்சியில் தனித்தனியாக 19 திருமணங்களை நடத்தி வைத்துள்ளது. அது போல நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் 24-11-1985 முதல் 10-2-1989 வரை பிள்ளையார்பட்டியில் 38 கூட்டுத் திருமணங்களை நடத்தி வைத்துள்ளது. மேலும் 7-9-1989 அன்று நம்மில் வசதிக் குறைவான குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பெண்களுக்கு பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்களை நடத்தி வைத்து நகரத்தார் வரலாற்றில் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிள்ளையார்பட்டியில் 7-9-1989 வியாழனன்று ஏழு கூட்டுத் திருமணங்கள் சிறப்பாக நிகழ்ந்தன. இதில் ஒரு திருமணத்திற்கு ரூ. 15,000/- வீதம் ஏழு திருமணங்களுக்கு ரூ. 1,05,000/- செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பெற்றது.

பள்ளத்தூர் ராம. அழகப்ப செட்டியாரின் புதல்வி செல்வி தெய்வானை என்கிற சரஸ்வதிக்கும் தேவகோட்டை பெரி. லெ. கதி. மாணிக்கம் செட்டியாரின் புதல்வன் செல்வன் மோகன சுந்தரத்திற்கும்—

தேவகோட்டை கதி. ராம. வீரப்ப செட்டியாரின் புதல்வி செல்வி தனலெட்சுமிக்கும் நாட்டரசன்கோட்டை கண. மீ. ராமகண்ணப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் பழநியப்பனுக்கும்—

வலையபட்டி மு. அ. மு. சிவலிங்கம் செட்டியார் புதல்வி செல்வி கல்யாணிக்கும் கண்டவராயன்பட்டி மு. வீர. சுப. சீனிவாசன் செட்டியார் புதல்வன் செல்வன் பரமசிவம் B.Comக்கும்

கண்டவராயன்பட்டி மு. வீர. சுப. சீனிவாசன் செட்டியார் புதல்வி செல்வி பார்வதிக்கும் வலையபட்டி மு. அ. மு. சிவலிங்கம் செட்டியார் புதல்வன் லெட்சுமணனுக்கும்—

தேவகோட்டை சித. பழநியப்ப செட்டியர்ர் புதல்வி செல்வி திருமாளுக்கும் தேவகோட்டை கரு. பழ. சேதுராமன் செட்டியார் புதல்வன் செல்வன் ராதா கிருஷ்ணனுக்கும்—

அரிமளம் அழ. ப. அழ. பழநியப்ப செட்டியார் புதல்வி செல்வி சித்ராவுக்கும் தேவகோட்டை முரு. பழ. சுப. இளை. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வன் செல்வன் பழநியப்பனுக்கும்—

தேவகோட்டை முரு. பழ. சுப. இளை. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி கண்ணம்மைக்கும் அரிமளம் அழ. ப. அழ. பழநியப்ப செட்டியார் புதல்வன் செல்வன் அழகப்பனுக்கும்—

ஆக ஏழு திருமணங்கள் சரி

எல்லாம் அமெரிக்கர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடத்தையெல்லாம் போய்ப் பார்த்தோம். இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது திரு. ராஜரத்தின பட்டர் விடுமுறையில் மதுரைக்கு வந்திருக்கிறார்கள். இங்கு மீனாட்சி அம்மனுக்கு திருக்கல்யாணம், பட்டாபிஷேகம், முதலியவைகள் நடப்பது போல அங்கும் நடத்துகிறார்கள். வயிரவன் சுப்பிரமணியம் அவர்களையும் ஒருமுறை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வரவேற்கும் வாய்ப்பினைப் பெற்றேன். ஹூஸ்டன் நகரத்தாரிடமிருந்தும், தமிழர்களிடமிருந்தும் பிரியா விடை பெற்றுக் கொண்டு நாங்கள் சிக்காக்கோ வந்து சேர்ந்தோம்.

(வளரும்)



பாகனேரியில் 3—9—89 அன்று நிகழ்ந்த செல்வன் சிவ. இராமநாதன் M. Sc. M. Ed, C G. T. - செல்வி கவிதாராணி M. A. M. Phil திருமணவிழாவில் 'அறமனச் செம்மல்' சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் வாழ்த்துரை வழங்கும் காட்சி.

யாக காலை 9-38க்கு ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

பிள்ளையார்பட்டியில் திருச்சி நகரத்தார் சங்கம் இதுவரை (9 வரிசைகளில்) 45 திருமணங்களை நடத்தி வைத்துப் பெரும் புண்ணியத்தைத் தேடிக்கொண்டுள்ளது.

திருப்பூட்டி முடிந்தவுடன் பெண்கள் விடுதியில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் பொறியாளர் எல். என். லெட்சுமணன் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. எல். என். லெட்சுமணன் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து திருவாளர்கள் எஸ். அண்ணாமலை செட்டியார், புலவர் மாமணி மா. முத்துராமன் நா. இளங்கோவன், ''நகரத்தார் குரல்'' துணை ஆசிரியர் எல். சுந்தரம், அ. சொ. சுப்பையா செட்டியார், சுந்தரம், வெங்கடாசலம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். திரு. கந்ததாசன் இராமநாதன் பக்திப் பாடல் ஒன்று பாடினார். சங்கத்தின் செயலாளர் திரு. எஸ்பி. அருணாசலம் நன்றி கூறினார்.

இக் கூட்டுத் திருமணங்களை பிள்ளையார்பட்டியில் நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் செய்துவரும் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் நடப்பு அறங்காவலர்கள் வலையபட்டி என். என். முத்துவள்ளியப்ப செட்டியார் அவர்களுக்கும் காரைக்குடி பி. எஸ். ஆர்எம். இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப் பெற்றது.

திருமணங்கள் நம் இன வழக்கப்படி சடங்கு முறை மாறாமல் சிறப்பாக நடைபெற்றன. திருமணவிழாவில் சுமார் ஆயிரம் பேர் பங்கு பெற்றனர். அவர்களுக்கு காலைச் சிற்றுண்டியும் பகல் உணவும் வழங்கப்பெற்றது.

திருச்சி நகரத்தார் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களோடு அவர்கள் வீட்டு ஆச்சிமார்களும் ஆர்வமாகப் பங்கு கொண்டு அனைத்துப் பணிகளையும் சிறப்புறச் செய்து உதவினர்.


சுப. அண்ணாமலைக்குப் பாராட்டு விழா!

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் சிறந்த இலக்கியச் சிந்தனையாளருமான தமிழாகரர் முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு மதுரை நகரப் பெருமக்கள் சார்பாக 13-10-89 வெள்ளியன்று மதுரையில் பாராட்டு விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

முனைவர் திரு. சுப. அண்ணாமலை- திருமதி மீனாட்சி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 3-10-89 அன்று நடைபெற உள்ளது. அதனையொட்டி அமைக்கப் பெற்றுள்ள மணி விழாக் குழுவின் தலைவராக தொழிலதிபர் லெ நாராயணன் செட்டியார் அவர்களும் துணைத் தலைவர்களாக திருவாளர்கள் கருமுத்து தி. கண்ணன், சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் இராம. ரெங்கநாதன் செட்டியார், வி. என். சிதம்பரம் செட்டியார், ந. மணிமொழியன், டி. அமிர்தம், டாக்டர் ஏ. டி. ஜெகதீஷ் பாண்டியன் ஆகியோரும் பொருளாளராக இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்களும் (நாகப்பா சைக்கிள் மார்ட்) செயலாளராக கலைமகள் இராம. நடராசன் செட்டியார் அவர்களும் இணைச் செயலாளர்களாக பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கமும் பொறுப் பேற்றுள்ளனர்.


மலர்க்குழுவிற்கு சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைவராகவும் பேராசிரியர் திரு. ஈ. வே. மாரியப்பன் பதிப்பாசிரியராகவும் பொறுப்பேற்றுள்ளனர். மதுரை இராமநாதபுரம் வணிகக் கழகக் கட்டிடத்தில் பாராட்டு விழா 13-10-89 வெள்ளி மாலை 4-00 மணிக்குத் தொடங்குகிறது. லெ நாராயணன் செட்டியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க திரு. ந. மணிமொழியன் வரவேற்புரை நிகழ்த்த இராம. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் தொடக்க உரையாற்றுகிறார்கள். பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வாழ்த்து மடல் வாசித்தளிக்கிறார்.

'முத்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், முனைவர் திருமதி இராதா தியாகராசன் துணைவேந்தர் திரு. எம். லெட்சுமணன், முனைவர் திரு. தமிழண்ணல், திரு. எஸ். எஸ். தென்னரசு திரு. எம். ஏ. முருகேஷ் திரு. சாலமன் பாப்பையா



திரு. சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்க இருக்கிறார்கள். கருமுத்து திரு. தி. கண்ணன் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்க இருக்கிறார்.

மணிவிழாவின் முதல் மலரினை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் வெளியிட வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பெற்றுக் கொள்ள இருக்கிறார்கள். சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நினைவுப் பரிசு வழங்க இருக்கிறார்கள். கவிஞர் பெரி. சிவனடியான் வாழ்த்துக் கவிதை வழங்க கலைமகள் நடராசன் செட்டியார் அவர்கள் நன்றியுரை வழங்குகிறார்கள்.



பட்டினத்தடிகளின் 7 ஆம் திருநாளில் (12-8-89) பட்டினத்தடிகளின் தாயார் பரிபூரணமடைந்த பின் நடைபெற்ற துக்கம் விசாரிக்கும் காட்சியில் திரு. சொ. பழநிமலை அற்புதமாக நடித்துப் பாராட்டுதலைப் பெற்றார். அருகே திரு. எல். சுந்தரம், திரு. ஆறுமுகம் திரு. பழ தெ. லெ. அரு. 'இரசிகமணி' திரு. சீனு தானு ஆகியோர்.

உப்பூரில் இராமாயணம் தொடர் சொற்பொழிவு

ஸ்ரீ இராமபிரான் சேதுஅணை கட்டச் சென்றபொழுது வழியில் உள்ள உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வழிபட்டுச் சென்றார். இன்றும் இராமேஸ்வரம்-காசி யாத்திரை செல்வோர் உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வழிபட்டு யாத்திரையைத் தொடங்குவது மரபு உப்பூரில் சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு வெயிலுகந்த விநாயகர் கோயிலின் திருப்பணியினைத் தேவகோட்டை ஜமீன்தார் ஏஎல். ஏஆர். குடும்பத்தினர் செய்தனர். அந்த உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயிலில் 29-8-89 முதல் 4-9-89 முடிய ஒருவாரம் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ''இராமாயணம்'' தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினர். சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் வரவேற்று திரு. அரு. சோ. வுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

சிவகாசி சங்கம்

சிவகாசி நகரத்தார் வணிகர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் 17-7-89 அன்று நடைபெற்றது. அப்போது திரு. வி. திருநாவுக்கரசு தலைவராகவும் திரு. கேஎன். அண்ணாமலை துணைத் தலைவராகவும் திரு சொ. பழநியப்பன் செயலாளராகவும் திரு. வி. சேவுகன் செட்டி இணைச் செயலாளராகவும் திரு ஏ. ஆர்எம். கேஎம். முத்தையா பொருளாளராகவும் மற்றும் இவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

அம்பத்தூர்
நகரத்தார் மன்றம்

சென்னை, அம்பத்தூர் நகரத்தார் மன்றத்தின் பொதுக்குழுக் கூட்டம் 23-4-89 அன்று சென்னை சர் இராமசாமி மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அப்போது திரு. சி. வி. சி. லெட்சுமணன் தலைவராகவும் கவிஞர் திரு. இராம. இராமநாதன் செயலாளராகவும் திரு. கே. சுப்பையா துணைச் செயலாளராகவும் திரு. விஆர். லெட்சுமி நாராயணன் பொருளாளராகவும் மற்றும் 6 பெண்கள் உட்பட 23பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் இருவர் கணக்கு ஆய்வாளர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர். இந்தப் புதிய நிர்வாகக் குழு இரண்டு ஆண்டுகள் செயல்படும் என அறிவிக்கப் பெற்றுள்ளது.

புலவரின் சாதுர்யம்!

திருநெல்வேலி மாவட்டம் வண்டானம் என்னும் ஊரில் முத்துச்சாமி அய்யர் என்ற ஒரு புலவர் இருந்தார். அவர் சிலேடையாகப் பேசுவதிலும் பாடுவதிலும் வல்லவர். ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்த இருதயாலய மருதப்ப தேவரிடம் ஒரு சமயம் இவர் சென்று அவர் பேரில் சில பாடல்களைப் பாடிக் காட்டித் தமக்குத் திருமணம் ஆகவேண்டியிருப்பதால் பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு ஜமீன்தார் ''நீர் திருமணத்திற்கு முடிவு செய்துகொண்டு வந்தால் நான் நூறு ரூபாய் தருவேன்'' என்றார். புலவர் தம்மூர் சென்று சிலகாலம் கழித்து வந்து தமக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டதென்றும் பொருளுதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டார்.

ஜமீன்தார் புலவரிடம் ''நான் எவ்வளவு ரூபாய் தருவதாக முன்பு சொன்னேன்?'' என்று கேட்டார். அதற்குப் புலவர் ''நானூறு ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள்'' என்றார். ''அப்படிச் சொன்னதாக எனக்கு நினைவில்லையே!'' என்றார், ஜமீன்தார். ''முன்னூறு தருவதாகச் சொன்னீர்கள் என்றார்'' புலவர். ''அப்படியும் சொல்ல வில்லையே!'' என்றார் ஜமீன்தார்.

''இரு நூறு தருவதாகச் சொன்னீர்கள்'' என்றார் புலவர். ''என்ன! பொய் சொல்லுகிறீரே?'' என்று கோபத்துடன் சொன்னார் ஜமீன்தார். ''இல்லை! தாங்கள் நூறு ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள்'' என்றார் புலவர். ஜமீன்தார் புலவரிடம் ''எதற்காக நானூறு, முன்னூறு, இருநூறு என்று மாற்றி மாற்றிச் சொல்கிறீர்கள்?'' என்றார்.

புலவர் ஜமீன்தாரிடம் ''தாங்கள் 'நான் நூறு (நான்+நூறு) தருவேன்' என்று சொல்லவில்லையா? முன் (முன்பு நான் வந்த பொழுது) நூறு தருவதாகச் சொல்ல வில்லையா? 'இரு (சிலகாலம் காத்திரு) நூறு தருகிறேன்' என்றதும் பொய்யா?'' என்றார்.

புலவரின் சாதுர்யமான பேச்சைக் கேட்டு வியந்த ஜமீன்தார் மகிழ்ச்சியுடன் அவருக்கு நானூறு (400) ரூபாய் கொடுத்து அனுப்பி வைத்தார்.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி.

''உடைப்பெருஞ் செல்வமாய் ஊற்றதன் நீராய்
மடைப்பெரும் வெள்ளமாய் மாணவர்க்கு-கல்வி
அடைக்கல (வி) நாயகரே ஆல்போல் தழைக்க
அடைக்கல முன்றன் அடி''

(பள்ளத்தூர் அ. செ. மேல்நிலைப் பள்ளியில் உள்ள அடைக்கல விநாயகர் பற்றி எழுதப் பெற்ற வெண்பா இது.)

எழுதியவர்: புலவர் மாமணி மா. முத்துராமன்

திருவிடைமருதூர்

அருள்மிகு மகாலிங்கப் பெருமான் கோயில் கொண்டுள்ள ஊர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூராகும்.

இடைமருது, மத்தியார்ச்சுனம், வீரசோழபுரம், பூலோக சிவலோகம் முதலிய பன்னிரண்டு பெயர்கள் இலக்கியங்களிலும் புராணங்களிலும் திருமுறைகளிலும் இத்தலத்திற்கு வழங்கப்படுகின்றன. வடக்கே வடுக நாட்டிலுள்ள மல்லிகார்ச்சுனத்திற்கும் (ஸ்ரீசைலம்) தெற்கே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருப்புடை மருதூருக்கும் (புடார்ச்சுனம்) இடையில் இத்தலம் இருப்பதால் இதற்கு இடைமருது (மத்தியார்ச்சுனம்) என்னும் பெயர் அமைந்துள்ளது. 'அர்ச்சுனம்' என்ற வட சொல்லுக்கு 'மருதமரம்' என்று பொருள். இம் மூன்று சிவத்தலங்களிலும் தலவிருட்சம் மருத மரமே ஆகும்.

காவிரிப்பூம்பட்டினம் பட்டினத் தடிகளின் அற்புதத் திருவிழாவிற்குச் சென்று வருபவர்கள் இத்தலத்திற்கும் சென்று வருவது வழக்கமாக உள்ளது. அப்படிச் செல்பவர்கள் பெரும்பாலும் அருள்மிகு மகாலிங்கப் பெருமான் திருக்கோயிலின் வடக்கே மகாதானத் தெருவில் உள்ள தேவகோட்டை ராம. மெ. சத்திரத்தில் தங்குவது வழக்கம். இந்தச் சத்திரத்திற்கு தேவகோட்டையைச் சேர்ந்த திருவாளர்கள் இராம. கணேசன் செட்டியார், கண. இராமநாதன் செட்டியார், லெ. அரு. இராம. இராம. இராமநாதன் செட்டியார், மெ. லெ. மெ. நாச்சியப்ப செட்டியார், ராம. மெ. சித. வயிரவன் என்ற பாஸ்கரன் செட்டியார் ஆகிய ஐவர்

டிரஸ்டிகளாக உள்ளனர்.

தைப் பூசத்தின் போது பஞ்ச மூர்த்தி சுவாமிகள் திருவிடை மருதூர் காவிரி ஆற்றில் எழுந் தருளி தீர்த்தம் வழங்கும். அப் போது மதியம் இச்சத்திரத்தில் சுமார் ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப் பெறு கிறது.

மார்கழி மாதம் இவ்வூரில் நடைபெறும் திருப்பாவை- திரு வெம்பாவை நிகழ்ச்சியை ஒட்டி இச்சத்திரத்தார் பாடல் போட்டி நடத்தி பரிசுகள் வழங்குகிறூர் கள்.

இச்சத்திரத்தில் அன்ன பூரணி சன்னதி உள்ளது. வேத ஆகம பாடசாலேயும் உள்ளது. அதில் 5 பையன்கள் வேதம் கற்று வருகின்றனர்.

தேவகோட்டை மெ. லெ. மெ. இராமநாதன் செட்டியார் அவர்கள் 1916ல் இங்குள்ள அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் சுவாமி சன்னதி -யை கல் திருப்பணியாக அமைத் திருக்கிறூர்கள்.

தேவகோட்டை மெ. லெ. மெ. குடும்பத்தினர் இவ்வூரில் பசுமடம் ஏற்படுத்தி தினசரி மகாலிங்க சுவாமிக்கும் அம்பா ளுக்கும் அபிஷேகத்திற்குப் பால் வழங்கி வருகிறூர்கள்.

இங்குள்ள ராம. மெ. சத் திரத்திற்கு நகரத்தார் யார் சென்றூலும் 3 நாட்களுக்கு இல வசமாகப் பகலிலும் இரவிலும் உணவு வழங்குகிறூர்கள்.

— "எல்லெஸ்"

நகரத்தாரே சிந்தியுங்கள்!

நம்மினத்தில் 'மாப்பிள்ளேப் பலகாரம்' என்று சொல்லிக் கொண்டு ஒரு அநியாயம் நடை பெற்று வருகிறது. வசதிக்குத் தகுந்தாற் போல் முறுக்கு, மாவு ருண்டை, சீப்புச் சீடை என்று திருமணங்களின்போது பெண் வீட்டார் தாமே செய்து அல்லது 'ஆர்டர்' கொடுத்து விலேக்கு வாங்கி மாப்பிள்ளே வீட்டாருக் குக் கொடுத்து வருகிறூர்கள். 8 சுற்று, 10 சுற்று என்று பெரிய முறுக்காகவும் பெரிய அளவு மாவுருண்டையாகவும் மெது வான சீப்புச் சீடையாகவும் மாப் பிள்ளே வீட்டார் கேட்டுப் பெறு கிறூர்கள் இதனுல் பெண்களேப் பெற்றவர்களுக்கு திருமணச் செலவோடு ரூ. 3000/- முதல் ரூ. 4000/- வரை தகுதிக் கேற் பக் கூடுதல் செலவு ஏற்படுகிறது.

அதுவும் தயாரித்த முறுக்கு களை அல்லது 'ஆர்டர்' கொடுத்து வாங்கிய முறுக்குகளை அவை களுக்கென சில நகரத்தார் வீடு களில் உள்ள சிறப்புத் தகரங்க ளில் பக்குவமாக அடுக்கி ஒன்று கூட உடைந்து விடாமல் மாப் பிள்ளை வீடு கொண்டு போய்ச் சேர்ப்பது என்பது பெரிய கலை. மேற்படி பலகாரங்களைத் தலைச் சுமையாக அல்லது வாடகைக்கு கார் பிடித்து அனுப்பிவைக்கிறார் கள். இதற்கு வேறு செலவு!

விலைவாசிகள் உயர்ந்து விட்ட நிலையில் தொடர்ந்து மாப்பிள்ளைப் பலகாரங்கள் கேட் பதும் கொடுப்பதும் சரியல்ல என்பதை ஒவ்வொரு நகரத் தாரும் உணர வேண்டும். சிந் தித்துச் செயல் பட வேண்டும்.

— வி. ஆர். சின்ன அருணாசலம்

தேவகோட்டை.

திருமணம்

கண்டனூர் பெரி. மு. ராம. பெரி. பெரியகருப்பன் செட்டி யார் அவர்கள் புதல்வி செல்வி விசாலாட்சி (B.Com) க்கும் ஆத் தங்குடி சி. நா. நா. ராம. ராம. நச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமனாதன் B. E., D. B. A. க்கும் 7-9-89 அன்று கண்டனூர் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தை யொட்டி நடைபெற்ற வாழ்த் தரங்கில் காரைக்குடி மத்திய மின்சார இரசாயன ஆராய்ச்சி நிலைய இயக்குனர் பேராசிரியர் திரு. எஸ். கே. ரெங்கராஜன் முன்னிலை வகிக்க சி. நா. நா. ராம. ராமனாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் டாக்டர் அர. சிங்காரவடிவேலன் டாக் டர் வி. கிருஷ்ணன் டாக்டர் பிஆர். இராமசாமி டாக்டர் எஸ்பி. சிதம்பரம் இரசிகமணி ஆர்எம். சிதம்பரம் செட்டியர்ர் (ஸ்ரீ விசாலம் சிட்பண்ட்) மற்றும் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள். மணமகன் திரு. இராமனாதன் நன்றி கூறினார்.

வரவேற்பும் சொற்பொழிவும்

திருவீழிமிழலையில் அப்பரும் திருஞானசம்பந்தரும் இறை வணங்கிப் பதிகம்பாடிப் படிக் காசு பெற்றுப் பஞ்சம் நீங்க மக்களுக்கு அன்னதானம் வழங்கி னர். திருவீழிமிழலைக்கு அருகில் உள்ள மருதவஞ்சேரி என்ற கிரா மத்தில் உள்ள மனுநாதேஸ்வரர் ஆலயத்தில் அண்மையில் 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்களுக்குச் சிறப்பான வர

வேற்பு வழங்கப் பெற்றது. வார வழிபாட்டு அன்பர்கள் திரளாகக் கூடிநின்று தேவாரம் பாடி வர வேற்றுப் பாதபூஜை செய்து வணங்கி விபூதி பெற்ற காட்சி திருநாவுக்கரசர் வாழ்ந்த காலத்தை நினைவூட்டியது. 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்கள் ''திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினர். அருகில் உள்ள கோட்டூரப்பண்ணை உரிமையாளரும் தேவகோட்டைச் சிவபக்தரும் ஆகிய திரு. கும. கரு. சொக்கலிங்கம் செட்டியார் தலைமை தாங்கினர். வழிபாட்டு மன்றச் செயலர் திரு. மணி நன்றி கூறினர்.

வளத்தி அம்மனுக்குப் படைப்பு

புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியம் அருள்மிகு வளத்தியம்மனுக்கு 11-8-89 வெள்ளிக்கிழமையன்று படைத்தார்கள். இதில் இளையாத்தக்குடி கோவில் கழனிவாசல் பிரிவைச் சேர்ந்த ஒன்பது ஊர் நகரத்தார் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். புள்ளிக்காரர்களுக்கு நான்கு நாட்கள் சாப்பாடும் பொது மக்களுக்கு மூன்று நாட்கள் சாப்பாடும் பரிமாறப் பெற்றது. ஏலமும் நடைபெற்றது.

காரைக்குடியில் பட்டி மன்றம்

காரைக்குடி கழனிவாசல் இடைச்சி அம்மன் கோவிலில் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் நடுவர் பொறுப்பேற்க பட்டிமன்றம் நடந்தது. கவிஞர் சுப. வீரபாண்டியன் வரவேற்றுப் பேசினர். சங்கக் கவிஞர் திரு. எஸ். இராமநாதன் தொடக்க உரை ஆற்றினர். இராமாயணத்தில் விஞ்சிய பெருமை இராமனுக்கே' என சோம. இராமநாதன், ஜெயலெட்சுமி, கஸ்தூரி நாதனும், 'சீதைக்கே' என்று நா. சுப்பிரமணியன், சு. சரசுவதி, எம். கே. சுப்பிரமணியனும் வாதிட்டனர். நடுவர் திரு. அரு. நாகப்பன் தனது தீர்ப்பில் 'சீதையே' என்று தீர்ப்பு வழங்கினர்.

நகரத்தார் புத்தக வங்கியின் ஆண்டு விழா

நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா மதுரையில் 15-10-89 ஞாயிறன்று ராஜா முத்தையா மன்றத்தில் மாலை மணி 3 முதல் இரவு 9 வரை கொண்டாடப் பெற உள்ளது.

இவ்விழாவில் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன், திரு. சொக்கு சுப்பிரமணியம், 'அல்ட்ரா' திரு. கரு. ஆறுமுகம் உட்பட பல முக்கியமானவர்கள் கலந்து கொண்டு வாழ்த்திப் பேச இருக்கிறார்கள்.

கூட்டுத் திருமணங்களை பிள்ளையார்பட்டியில் சிறப்பாக நடத்தி வரும் திருச்சி நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப் பெற இருக்கிறார்கள்.

இவ்விழாவின் முடிவில் மாலை 6-30 மணிக்கு 'மக்கள் கவிஞர்' திரு அரு. நாகப்பன் இயக்கும் ''விடுதலை யாருக்கு?'' என்ற புதுமையான நீதிமன்ற நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி, ஆண்டு விழாவையொட்டி 13, 14, & 15-10-89 தேதிகளில் பல விதமான போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப் பெற்றுள்ளது.

''எப்போதாவது கேட்டு வைத்தால் என்றாவது ஒரு நாள் பயன் கிட்டும்''

வேந்தன்பட்டி நந்திகேஸ்வரர் கோயிலில் 11-8-89 அன்று நடைபெற்ற திருவிளக்குப் பூஜையில் 'புலவர் மாமணி' திரு. மா. முத்துராமன் பேருரையாற்றினர். அப்போது பெண்கள் பகுதியிலிருந்து கலகலவெனப் பேச்சு வந்துகொண்டே இருந்தது. உடனே புலவர் மாமணி ''இந்தக் காதிலும், அந்தக் காதிலும் வாங்கி வாய் வழியாய் விட்டு விடாமல் மனதில் தேக்கி வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார். அப்போதும் பேச்சு அடங்கவில்லை. உடனே ''எப்போதாவது கேட்டுவையுங்கள்; அது என்றாவது ஒருநாள் பயன்கிட்டும்'' என்று ஒரு கதை சொன்னார்:

''கால்கள் நிலத்தில் பதியாமலும், கண்கள் இமைக்காமலும், மார்பில் அணிந்த மாலை வாடாமலும் இருந்தால் அவர்கள் தேவர்கள் ஆவார்கள்'' என்று தமயந்தி எப்போதோ கேட்டுவைத்திருந்தாள். அது அவளின் சுயம்வரத்தில் பயன் பெற்றது. நளனுக்கு அவள் மாலையிடப் போனாள். பக்கத்தில் நான்கு நளன்களையும் சேர்த்து ஐந்தாக ஓரே வடிவமாக இருந்தார்கள். பக்கத்தில் உள்ள மற்றைய இளவரசர்களையும், ஐந்தில் ஒரு நளனையும் உற்றுக் கவனித்தாள். பிறகு நான்கு நளன்களைப் பார்த்தாள். அவர்களின் கால்கள் பூமியில் தோயவில்லை; கண்கள் இமைக்கவில்லை; மாலை வாடவில்லை; அந்நால்வரும் ''தேவர்களே'' என்று உணர்ந்து உண்மை நளனுக்கு மாலையிட்டு அவனை மணவாளனாய் அடைந்தாள்.

— இக்கதையைக் கேட்டதும் பெண்கள் ஆர்வத்தோடு புலவர் மாமணியின் பேச்சைத் தொடர்ந்து கேட்டார்கள்.

கேட்டு எழுதியவர்: ச. சுப்பிரமணியன்
மேலைச்சிவபுரி

குட்டைய ஞான தேசிக சுவாமிகள் மடாலயத்தில் குட நீராட்டு!

மதுரை தெற்கு வெளி வீதியில் அமைந்திருக்கும் குட்டைய ஞான தேசிக சுவாமிகள் மடாலயத்தில் உள்ள குட்டைய ஞானதேசிக சுவாமிகளின் அதிஷ்டானத்திற்கும் அரசப்ப சுவாமிகள், கிருஷ்ணப்ப சுவாமிகள், சின்னையா சுவாமிகள், சிவானந்த சுவாமிகள் ஆகிய அதிஷ்டானங்களுக்கும் சுக்கில ஆவணி மீ 30உ (15-9-89) வெள்ளிக் கிழமை அதிகாலை 6-35 மணிக்கு குட நீராட்டுச் சிறப்பாக நிகழ்ந்தது. காலை 11-00 மணி சுமாருக்கு மகா அபிஷேகம் நடைபெற்றது.

மேற்படி குடநீராட்டை யொட்டி 14-9-89 வியாழன் மாலையும் 15-9-89 காலையும் யாக சாலைப் பூஜைகள் நடைபெற்றன. தேவகோட்டை சிலம்பணி சிதம்பர விநாயகர் கோயிலைச் சேர்ந்த விசுவநாதக் குருக்கள் யாகசாலைப் பொறுப்பேற்று சிறப்பாகச் செய்திருந்தார். தேவகோட்டை தி. வகை கைலாச விநாயகர் கோயில் பஞ்சாட்சரக் குருக்கள் சர்வசாதகம் செய்தார்.

இக் குடநீராட்டு விழாவில் கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் காளையார் கோவில் கா. செ. மடாலயம், மதுரை குட்டைய ஞான தேசிக சுவாமிகள் மடாலயம் ஆகியவற்றின் தலைவர் தவத்திரு. சிவானந்தசுவாமிகள் திருவாரூர் குமரானந்த சுவாமிகள் சென்னை வீர. சுப்பையா சுவாமிகள் மடாலயத்தைச் சேர்ந்த வித்தியானந்தகிரி சுவாமிகள் ஸ்ரீகைலாச ஆசிரமம் சின்மையானந்தபுரி சுவாமிகள் மற்றும் தேவகோட்டை அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குருபூஜைக்கும் குடநீராட்டு விழாவிற்கும் வருகை புரிந்த சாதுக்கள் மற்றும் மக்களுக்கு மதுரை இராதா கிருஷ்ண கல்யாண மண்டபத்தில் சிற்றுண்டியும் உணவும் பரிமாறப்பெற்றது.


காளையார்கோவில் கா. செ. மடாலயமும் மதுரை குட்டைய ஞானதேசிக சுவாமிகள் மடாலயமும் இணைந்து இக் குடநீராட்டு விழாவினை நடத்தியுள்ளன.

காரைக்குடி பள்ளியில் சிறப்புச் சொற்பொழிவு

காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியின் இலக்கியக்கழகத் தொடக்கவிழா 9-8-89 அன்று நடைபெற்றது. மூத்த ஆசிரியர் திரு. இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். திரு. குருமூர்த்தி வரவேற்றார். ''இசைப் பாடலிலே என் உயிர்த்துடிப்பு'' எனும் தலைப்பில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திரு. முருகையன் நன்றி கூறினார்.

திருமணம்

கருங்குளம் ராம. ரெ. ரெங்கநாதன் செட்டியார் அவர்களின் பௌத்திரியும் டாக்டர் ரெ. இராமநாதன் அவர்களின் புதல்வியுமான செல்வி நாச்சம்மை (B. Com) க்கும் பட்டமங்கலம் பெரி. சுப. கரும்புநாதன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் டாக்டர் விஜய்குமார் M.B, B. S. க்கும் 3-9-89 அன்று கருங்குளத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



தொழிலதிபர் கொப்பனுபட்டி பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமசாமி B. Com க்கும் நச்சாந்துபட்டி பெ. ராம. லெ. ராம. நடராஜன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அழகம்மை B Sc க்கும் நச்சாந்துபட்டியில் 21-8-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. (படத்தில் மணமக்களுடன் பழ. லெ. சொ. அவர்களும் வி. என். சிடி. அவர்களும் உள்ளனர்.)


திருமணம்

பாகனேரி இராம. அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி கவிதாராணி M. A. M.Phil க்கும் நாட்டரசன் கோட்டை பேராசிரியர் வீர. ஆ. ராம. சிவசுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமநாதன் M. Sc. M Ed. C. G. T. க்கும் பாகனேரியில் 3-9-89 ஞாயிறன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி நடைபெற்ற வாழ்த்தரங்கிற்கு ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிட் முதுநிலே மேலாளர் 'இரகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்று வரவேற்புரை நிகழ்த்திஞர்கள். திருவாளர்கள் முனைவர் சுப. அண்ணுமலே, சொக்கு சுப்பிரமணியம், பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார், முனைவர் ம. திருமலே, தமிழாசிரியர் பழ. பழநியப்பன், நா. இளங்கோவன், பாகனேரி மு. நாராயணன் செட்டியார், எல். சுந்தரம் (''குரல்'' துணை ஆசிரியர்) பேராசிரியைகள் திருமதி எம். ஏ. சுசீலா, திருமதி ராஜம், ஆர்கே. ரெங்கனுதபிள்ளை, 'எவர்பிரைட்' ஆவி. நாநாச்சியப்ப செட்டியார் ஆகியோர் மணமக்களே வாழ்த்திப் பேசிஞர்கள்.

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணுமலேக் கல்லூரி நிறுவனர் சேவு. அண. அண்ணுமலே செட்டியார் அவர்களும் ''நகரத்தார் குரல்'' இதழின் ஆசிரியர் 'மீனுட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் வாழ்த்துரை வழங்கிஞர்கள்.

வாழ்த்தரங்கைத் தொடர்ந்து



மணமகன்: செல்வன் சிவ. இராமநாதன், மணமகள்: செல்வி கவிதாராணி இவர்களது திருமணம் 3-9-89 அன்று பாகனேரியில் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

நடைபெற்ற கவியரங்கில் காவல் துறைக் கண்காணிப்பாளர் 'குப்பைக் கவிஞன்' வாசு கணபதி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்ள, 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்கள் தலைமையில் 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்ற தலைப்பில் கவிஞர்கள் முனைவர் சபா. அருணாசலம், மீனவன், இராகவன் முத்து, அழ. அண்ணாமலை, கா. நாகப்பன் ஆகியோர் கவி பாடி மகிழ்வித்தனர். திரு. இராம. அண்ணாமலை செட்டியார் நன்றி கூறினார்.

திருமணவிழாவில் திரு. பா. இராமச்சந்திர ஆதித்தன் மதுரை வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு. சுப. சபாபதி மற்றும் மதுரை வங்கியின் அதிகாரிகள் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், திரு. எம். சிஎன். மாணிக்கம் மற்றும் பேராசிரியர்கள், கவிஞர்கள், தொழிலதிபர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

தூத்துக்குடியில் சங்கம்

தூத்துக்குடியில் 14-4-89 அன்று புதிதாக நகரத்தார் சங்கம் தொடக்கப்பட்டுள்ளது. அப்போது திரு ஆர்-எஸ். சுப்பையா தலைவராகவும் திரு. என். நடேசன் துணைத் தலைவராகவும் திரு. எஸ். பெரிய வள்ளியப்பன் செயலாளராகவும் திரு. வி. ஆர். வீரப்பன் உதவிச் செயலாளராகவும் திரு. ஏஆர். பழநியப்பன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பெற்றனர்.

சங்கத்தின் முகவரி:
நகரத்தார் சங்கம்
14-A, கீழரெங்கநாதபுரம்
தூத்துக்குடி-628 002



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ முனைவர் தமிழண்ணல் அவர்கள் ''தினமணி'' நாளிதழில் ''உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்ற தலைப்பில் எழுதி வரும் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட அவர்களது மணி விழாக் குழு ஏற்பாடு செய்து வருகிறது.

ஃ இலக்கியச் செம்மல் கீரன் அவர்கள் மதுரை தமிழ் இசைச் சங்கம் சார்பாக ராஜா முத்தையா மன்ற அரங்கில் நாடக மயில், கர்ணன், திருத்தொண்டர், அருணகிரியார், மீனாட்சி கல்யாணம் ஆகிய தலைப்புகளில் 19-9-89 முதல் 23-9-89 வரை தொடர் சொற்பொழிவாற்றினார்கள்.

ஃ திருவாடானை அன்னை சிநேக வல்லியின் எட்டாம் ஆண்டு நவராத்திரி விழா 1-10-89 முதல் 9-10-89 வரை நடைபெற உள்ளது. அதனையொட்டி இயல், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

ஃ கானாடுகாத்தான் குமார ராஜா மு. அ. மு. முத்தையாச் செட்டியார் அவர்களின் 61 ஆவது பிறந்த தின நினைவு விழா சென்னை ராணி சீதை மன்றத்தில் 6-9-89 அன்று கொண்டாடப் பெற்றது.

ஃ டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் 109 ஆவது பிறந்த நாள் நினைவு விழா 30-9-89 அன்று சென்னை ராணி சீதை மன்றத்தில் கொண்டாடப் பெற்றது.

ஃ பண்டித ஜவஹர்லால் நேரு நூற்றாண்டு விழாவை யொட்டி மதுரை வானொலி நிலையம் 24-9-89 ஞாயிறன்று இரவு 9-30 மணி முதல் 10-30 வரை சிறப்புக் கவிதை நிகழ்ச்சியை ஒலிபரப்பியது. ''ஆசிய ஜோதி

அந்தாதி'' என்ற தலைப்பில் ஒலிபரப்பப் பெற்ற அதில் முனைவர் திரு. அர. சிங்கார வடிவேலன், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் பழநி திரு. இளங்கம்பன் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் கவிஞர் திரு. இராகவன் முத்து ஆகியோர் பங்கு பெற்று அந்தாதி பாடி மகிழ்வித்தனர்.

ஃ ஏழு ஊர் நகரத்தார்களின் குல தெய்வமான சொக்கநாதபுரம் அருகே உள்ள கத்தப்பட்டு தொட்டியத்துக் கருப்பர் கோயிலின் குடநீராட்டு 4-9-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ நகரக் கோயில்கள் 9ல் ஒன்றான நேமம் ஸ்ரீ சௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் கோயிலின் குடநீராட்டு விழா 9-4-90 திங்கட்கிழமை காலையில் நடைபெற உள்ளது.

ஃ காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயிலின் குடநீராட்டு விழா 7-9-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ பாகனேரி அன்னதான செல்வ விநாயகர் கோயிலில் 4-9-89 அன்று 5 ஆம் ஆண்டாக சதுர்த்தி விழா கொண்டாடப் பெற்றது. அதனையொட்டி முனைவர் திரு. கரு. முத்தையாவை நடுவராகக் கொண்டு பட்டி மண்டபம் நடைபெற்றது.

பாகனேரியில் விராடபருவம்

பாகனேரியில் 16-9-89 முதல் 18-9-89 முடிய 3 நாட்கள் வான்மழை வேண்டி நகரத்தார்கள் சார்பில் நகரத்தார் மாளிகையில் ''காசிஸ்ரீ'' அரு. சோமசுந்தரன் அவர்களால் ''மகாபாரதம்-விராடபருவம்'' தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. மூன்றாம் நாள் நிறைவு நிகழ்ச்சிக்குத் 'திருமுறைக் காவலர்' திரு. இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் தலைமை தாங்கினார். ஊராட்சித் தலைவர் திரு. மு. நாராயணன் செட்டியார் வரவேற்றார். திரு. வே. வேலாயுதம் செட்டியார் பொன்னாடை போர்த்தினார். புலவர் நீ. சீ. சுந்தரராமன் சிவபூசகர், திரு. குப. சொக்கலிங்கம் ஆகியோர் பாராட்டிப் பேசினர். திரு. வெள்ளையப்ப செட்டியார் நன்றி கூறினார். மூன்றாம் நாள் நிகழ்ச்சியின் போது கனமழை பொழிந்தது குறிப்பிடத்தக்கது.


பனையப்பட்டி சுப்பையா செட்டியாரின் மணி விழா!

பனையப்பட்டி பெ. முரு. சுப்பையா செட்டியார் அவர்களுக்கும் திருமதி சுப. அலமேலு ஆச்சி அவர்களுக்கும் சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் (26-8-89) சனிக்கிழமை பனையப்பட்டியில் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

இம் மணி விழாவையொட்டி 25-8-89 இரவு 8 மணி அளவில தொலைக்காட்சி புகழ் 'மாஜிக் இளவரசர்' திரு. எம். இராமச்சந்திரனின் மாயா ஜாலத்தந்திரக் காட்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

மணி விழா நாளன்று பிற்பகலில் முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நிகழ்ந்தது. முனைவர் திரு. சபா. அருணாசலம், முனைவர் திரு. வ. தேனப்பன் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் திரு. அரு. நாகப்பன் ஆகியோர் கவி பாடி மகிழ்வித்தனர். மாலையில் 'கண்ணதாசன் கவிதைகளில் விஞ்சி நிற்பது காதலா, பக்தியா?' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. 'காதலே' என்ற அணியில் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன், செல்வி சு. சரஸ்வதி, நாகதுரை அரசி ஆகியோரும் 'பக்தியே' என்ற அணியில் திரு. தி. அழகிரிசாமி, திருமதி சி. எஸ். விசாலாட்சி திரு. வி. கே கஸ்தூரி நாதனும் வாதிட்டார்கள். 'கண்ணதாசன் கவிதைகளில் விஞ்சி நிற்பது காதலே' என நடுவர் பொறுப்பேற்ற பூம்புகார், முனைவர் திரு. ஆ. ஜெகந்நாதன் தீர்ப்பு வழங்கினார். இரவு 10 மணிக்கு திருச்சி ஜான் பிரதர்ஸ் இசைக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

26-8-89 நள்ளிரவு பின்னை மாநகர் சகோதரர்கள் திரு. கேளம். தட்சிணாமூர்த்தி திரு. கேளம். உத்தராபதி குழுவினரின்



மணி விழாக் கண்ட பனையப்பட்டி பெ. முரு. சுப்பையா செட்டியார் அவர்களும் திருமதி சுப. அலமேலு ஆச்சி அவர்களும்.

தொலைக்காட்சி நிலையங்கள்!

''காசி நகர்ப் பெரும்புலவர் பேசும் உரைதான் காஞ்சியிலே கேட்பதற்கோர் வகை செய்வோம்'' என்று தொலைக்காட்சியே தோன்றாத நாளில் தம் தொலை நோக்கால் பாடினார் மகாகவி பாரதி. அவருடைய கனவு நனவாகி தொலைக்காட்சி வந்து விட்டது.

இந்தியாவில் இப்போது 355 தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. 18 மையங்களில் நிகழ்ச்சி அமைப்பு வசதிகள் உள்ளன. மதுரையில் நிகழ்ச்சித் தயாரிப்பு மையத்திற்கான இடம் வாங்கப்பட்டு உள்ளது.

நாதஸ்வரக் கச்சேரியும் நகரச் சிவன் கோயிலில் பஞ்சமூர்த்திகள் திரு உலாவும் சிறப்பாக நிகழ்ந்தன.

மணி விழா நாளில் திருப் பூட்டி முடிந்தவுடன் விரையாச் சிலை 'சைவசித்தாந்த வித்தகர்' முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் மணி விழா நாயகர் நாயகியைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கிப் பிரார்த்தனைப் பாமாலை நூலை வெளியிட்டார்கள். அவர்கள் வாழ்த்திப் பேசிய போது மணி விழா நாயகர் சுப்பையா செட்டியார் அவர்கள் பனையப்பட்டியில் பிரபலமான கருத்தான் செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மேற்படி கருத்தான் செட்டியார் அவர்கள் 80 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் மலேசியாவில் ரப்பர் தோட்டத்தில் ரப்பர் கன்று வைத்து உற்பத்தி செய்தவர்கள் என்றும் இச் செய்தி மலேயா அரசின் வரலாற்று நூலில் இடம் பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

மணி விழாவில் சர்வ கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள், மலேயா நண்பர்கள், தஞ்சை வாழ் நகரத்தார்கள், சுழற் குழு உறுப்பினர்கள் மருந்துத் தொழில் அதிபர்கள், மருத்துவர்கள், கணக்காய்வாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்த நாட்டார்கள் சீர் கொண்டு வந்து சிறப்புச் செய்தனர். ஏராளமாக வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

மணி விழாவிற்கு வருகை தந்தவர்களை திரு. சுப. முருகப்பன், திரு. சுப. மெய்யப்பன், நச்சாந்துபட்டி திரு. மெ. மு. வயிரவன், குளிபிறை திரு. மு. மு. ராம. மு. முத்துப்பழநியப்பன் ஆகியோர் வர வேற்றனர்.

நம் சமூகம் கண்ட இசை மேதை

நா. இராமனுதன்

பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியாரவர்களைப் பற்றிய கட்டுரைகளை ''நகரத்தார் குரல்'' ஜூலை, ஆகஸ்ட்' 89 இதழ்களில் படித்து மகிழ்ந்தேன். அவர்களுடன் நெருங்கிப் பழகிய நான் அவர்களைப் பற்றிய சில செய்திகளை இக்கட்டுரை மூலம் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

செட்டியாரவர்கள் இயல், இசை, நாடகக் கலையில் ஆர்வமும் நல்ல இரசிகத்தன்மையும் உள்ளவர்கள். இளமைப் பருவம் தாண்டியே அவர்கள் இசையைக் கற்றுக் கொள்ள வந்தார்கள். குறிக்கோளுடன் எடுத்த காரியத்தை நிறைவேற்ற-சங்கீத உலக ஜாம்பவான்களான அரியக்குடி, செம்மங்குடி போன்ற பெரியவர்களிடம் குருகுல வாசம் செய்து கர்நாடக இசையை நன்கு கற்றுக் கொண்டார்கள்.

சங்கீதத்தில் உள்ள பிரியத்தாலும், சமூகத்தில் இவர்களின் பெயர் ஓங்க வேண்டுமென்ற ஆர்வத்தாலும் நானும், என்னைப்போல் சில அன்பர்களும் இவர்களுக்கு உறுதுணையாக இருந்து இவர்கள் வெற்றியில் பங்கு எடுத்துக் கொண்டோம். பனையப்பட்டி அண்ணாமலை அய்யா அவர்களின் ஆசியும், சுப. அ. குடும்பத்தாரின் உதவியும் இவர்களுக்கு மிகுதியாக இருந்தது.

அங்கும், இங்குமாக சில கச்சேரிகளுக்குப் பிறகு காரைக்குடியில் 1937 ஆம் ஆண்டு இவர்கள் பாட கும்பகோணம் இராஜமாணிக்கம்பிள்ளை பிடில்-பாலக்காடு மணி அய்யர் மிருதங்கம்-பழநி சுப்ரமண்யபிள்ளை கஞ்சிரா - மன்னார்குடி நடேசபிள்ளை முகர்சிங் என்று பெரிய பக்க வாத்தியங்களுடன் மிகுந்த பரபரப்புடன் கச்சேரி நடைபெற்றது. செட்டியார் அவர்களது பாட்டைக் கேட்க ஏராளமான கூட்டம். கச்சேரியும் மூன்றரை மணிநேரம் களைகட்டி இனிது நடந்தது. இரசிகர்களும் பாராட்டினார்கள் அதன்பின் சமூக அபிமானி குமரப்ப செட்டியாரவர்கள் புதல்வன் திருமண வீட்டில் இராங்கியத்தில் மைசூர்




வினைதீர்த்தான் செட்டியார்

T. சௌடையா அவர்கள் பிடிலுடன் இவர்களது கச்சேரி நடந்தது.

திருவையாறு ஸ்ரீ தியாகப்பிரம்ம உற்சவம், சிக்கல் சிங்கார வேலர் விழா இங்கெல்லாம் இவர்கள் பாடி இரசிகர்களை மகிழ்வித்திருக்கிறார்கள்.

குருவிக்கொண்டான்பட்டியில் ஒரு மணி விழாவில் நல்ல பக்கவாத்தியங்களுடன் போற்



காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் ''முன் பிறந்து பின் பிறந்தான்'' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் உரையாற்றும் காட்சி.

றத்தகுந்த முறையில் பாடினார்கள், முத்துமாரி அம்பாள் பேரில் உள்ள விருத்தப் பாடலை ராக மாலிகையாகப் பாடியது இன்றும் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

நம் சமூகம் மிகச்சிறிய சமூகமாக இருந்தாலும் அவ்வப் பொழுது நல்ல அறிஞர்களும், கலைஞர்களும் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். இசைக் கலைக்கு பனையப்பட்டி வீணைதீர்த்தான் செட்டியாரவர்கள் ஓர் எடுத்துக் காட்டு. இன்று அவர்கள் நம்மிடையே இல்லை. இருந்தால் ''இசைப் பேரறிஞர்'' எனும் பட்டம் பெற்றிருப்பார்கள்.

வீணைதீர்த்தான் செட்டியாரவர்கள் சில தமிழ்ப் பாடல்களை இயற்றியது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர்கள் தமிழ்ப் பற்று, நாட்டுப் பற்று மிக்கவர்கள். குறிப்பாக மதிக்கத்தக்க கர்நாடக இசைக் கலைஞராக வாழ்ந்தவர்கள்.

நம் சமூகம் காணும் கலைஞர்களின் வெற்றியில் நம்மவர்கள் அதிகச் சிரத்தை எடுத்து ஆதரவு தரவேண்டுமென்ற நிலையில் இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

தஞ்சையில் சீருடை வழங்கும் விழா

அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் தஞ்சைக் கிளையின் (பதிவு எண் 1325) மூன்றும் ஆண்டு சீருடை வழங்கும் விழா 23-7-89 அன்று கீழவாசல் பாம்பாட்டித் தெருவில் உள்ள நகர விடுதியில் மாநில துணைத்தலைவர் திரு. எம். முத்தையா செட்டியார் தலைமையில் நடைபெற்றது. 52 பள்ளி மாணவ, மாணவியருக்குச் சீருடை வழங்கப்பட்டது. விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளைத் தஞ்சை கிளையின் தலைவர் திரு. ஆர்எம். ஜோதிலிங்கம் சிறப்பாகச் செய்திருந்தார்.

மதுரை குட்டைய சுவாமிகள் மடாலயம்: சில செய்திகள்!

மதுரை தெற்கு வெளி வீதி கதவு எண் 164ல் குட்டைய சுவாமிகள் மடாலயம் உள்ளது. இது 150 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டதாகும். காளையார் கோவில் கா. செ. மடாலயத்தோடு இணைந்தது இது. இம் மடாலயத்தின் இப்போதைய மடாதிபதி தவத்திரு சிவானந்த சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் கண்டனூர் தீர்த்தப்ப செட்டியார் வீட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களது இயற்பெயர் வெங்கடாசலம் என்பதாகும். இவர்கள் மாத்தூர்க்கோயில் மணலூர் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் திருச்சி நேஷனல் கல்லூரியில் பி. ஏ. வரை படித்தவர்கள். திருமுறைகள், சைவசித்தாந்தம் தெரிந்தவர்கள் 67வயதுடைய இவர்கள் இல்லறத்திலிருந்து துறவறத்திற்கு வந்தவர்கள்.

குட்டைய சுவாமிகள் மடாலயத்தில் ஆறு அதிஷ்டானங்கள் உள்ளன. இம் மடாலயத்தை உருவாக்கியவர் நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த கண்ணப்ப சுவாமிகள் ஆவார்கள். ஆனால் இம் மடாலயத்தை 25 ஆண்டுகள் தேவகோட்டையைச் சேர்ந்த குட்டைய ஞானதேசிக சுவாமிகள் நிர்வகித்து வந்ததால் அவர்களது பெயரே இம்மடாலயத்திற்கு நிலைத்து விட்டது.

குட்டைய சுவாமிகள்

தேவகோட்டையில் பிறந்தவர்கள். இலுப்பைக்குடிக் கோயிலைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இந்த மடாலயத்தில் சிவலிங்கத் திருமேனியில் இருக்கிறார்கள்.

அரசப்ப சுவாமிகள்

காரைக்குடியில் பிறந்தவர்கள். பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கு சிவலிங்கத் திருமேனியில் இருக்கிறார்கள்.

கிருஷ்ணப்ப சுவாமிகள்

மதுரையில் பிறந்தவர்கள். நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கு கிருஷ்ணன் திருமேனியில் இருக்கிறார்கள். குட்டைய சுவாமிகளுக்கும் அரசப்ப சுவாமிகளுக்கும் தொண்டு செய்தவர்கள்.

சின்னையா சுவாமிகள்

கொல்லங்குடி அழகாபுரியில் பிறந்தவர்கள். இளையாத்தக்குடி கிங்கிணிக்கூருடையார் பிரிவைச் சேர்ந்தவர்கள். குட்டைய சுவாமிகளின் மாணக்கர். இங்கு நந்தித் திருமேனியில் இருக்கிறார்கள்.

கண்ணப்ப சுவாமிகள்

நாட்டரசன்கோட்டையில் பிறந்தவர்கள். இளையாத்தக்குடி கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தம் காலத்தில் குருந்தணி சம்பக்குளம் ஆகிய கிராமங்களை இம்மடாலயத்திற்கென வாங்கியிருக்கிறார்கள். இங்கு பலிபீடத் திருமேனியில் இருக்கிறார்கள். கோவிலூர் சிதம்பர ஞானதேசிக சுவாமிகளின் மாணக்கர்.

சிவானந்த சுவாமிகள்

நாட்டரசன்கோட்டையில் பிறந்தவர்கள். இளையாத்தக்குடி கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர்கள். இங்கு சிவலிங்கத் திருமேனியில் இருக்கிறார்கள். கோவிலூர் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின் மாணக்கர்.

ஒக்கூரில் சங்கச் சான்றோர் நினைவுக் கல்!

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் சிவகங்கை வட்டத்தைச் சேர்ந்தது ஒக்கூர். சங்ககாலப் புலவராகிய மாசாத்தியார் இந்த ஊரைச் சேர்ந்தவர். இவரது பாடல்கள் புறநானூறு. அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளன.

சங்கச் சான்றோர் நினைவுக் கல் நிறுவும் திட்டத்தின் கீழ், அரசு ஒக்கூரில் கல்தூண் நிறுவ 1,12,500 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒக்கூரில் நினைவுக் கல் அமைத்திடும் இடம் தேர்வு செய்யப்பட்டு நினைவுக்கல் நிறுவும் பணி விரைவில் துவங்கப் படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.இளங்கோவன் தெரிவித்திருக்கிறார்.

திருமணம்

நாட்டரசன்கோட்டை வீர. ஆ. ராம. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் சோமசுந்தரம் B. Com. க்கும், பாகனேரி ஆறு. சுப. கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வி மீனாட்சிக்கும் 20-8-89 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் திரு. டி. சிவசங்கரன் இராயவரம் திரு. மு. அ. மு. சுப. காசிச் செட்டியார் போன்றவர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

நினைவு அஞ்சலி



தோற்றம்: 18-7-1921

மறைவு: 15-10-1988

M. SP. சண்முகம் M.A.,

எளிமையுடன் நேர்மையினைக் கடைப்பிடித்து
எல்லோருக்கும் உதவுகின்ற குணம்படைத்து
வலிமைமிகு நகரத்தார் சங்கம் கண்டு
வரலாற்றில் இடம்பெற்று எந்தநாளும்
அழியாத புகழ்பெற்ற எம். எஸ்பி. யாம்
அன்பான சண்முகனார் நினைவு கூர்ந்தே
விழியாலே நீர்வடித்துப் போற்றுகின்றோம்
விண்ணிலிருந்து அருள் வழங்க வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்களை நினைந்து உருகும்
பார்வதி சண்முகம் (மனைவி)

S. மீனாள் (மகள்) S. சிதம்பரம் (மகன்)
டாக்டர்மணி அருள்நந்தி (மகள்) S. ராஜா சுப்பிரமணியன் (மகன்)
S. அழகு (மகள்) C. சண்முகம் (பேரன்)

திருமண மாலைக்கு... சில பாடல்கள்!

வசதியின்மை காரணமாய்த் திருமணம் ஆகாமல் தவிக்கும் நகரத்தார் குலக் கன்னியர்கள் திருமண மாலை வேண்டித் தெய்வங்களைத் துதித்துப் பாராயணம் செய்ய எழுதப்பட்ட பாடல்கள் இவை:

கற்பக விநாயகர்

மனம்களிக்கச் செழுங்கருணை
மழைபொழியும் கற்பகமாம்
வள்ளால்! வையம்
தினம் களிக்க அருள்நிதியே!
மலைமகட்கோர் திருமகனே!
தேவே! எம்மைப்
பணம் கழிக்க, இல்லறமாம்
பாதைக்கே வழியின்றிப்
பதைக்கும் எங்கள்
இனம் களிக்க, உளம் களிக்க,
மணமாலை வேண்டியுனை
இறைஞ்சினோமே!

ஆண்டுகளோ பலப்பலவாய்க்
கழிந்தோட, பருவமகன்(று)
அழுதே பொங்கி
வேண்டியுனைச் சரணடைந்தோம
விநாயகனே! எம் கொடிய
வினைகள் தீர்த்து
மாண்டகுநல் நகரத்தார்
குலக்கன்னி யெனக்கு மண
மாலை தன்னை
ஈண்டருள நின்னரிய
செம்மலர்த்தாள் பற்றியவா(று)
இறைஞ்சினேனே!

அன்னை மீனாட்சி

மீனவனின் திருமகளாய்
உலகுய்ய அவதரித்து
வீரம் மிக்க
தானைதனை வழிநடத்திச்
சுந்தரனார் கரந்தொட்டுத்
தந்த பொற்பூத்
தேனளிசூழ் மணமாலை
திருக் கழுத்தில் பூண்டுமகிழ்
தேவே! நாங்கள்
காணுமொரு அவலநிலை,
. மீன்போலும் கண்ணுடையாய்
காண்கிலாயோ?

நீயுமொரு பெண்ணலவோ?
நீள்விழியில் அருவியென
நிறைந்தே பொங்கிப்

பாயுமெங்கள் கண்ணீரைப்
பார்க்கிலேயோ? சீர்தனமாம்
பணத்தால் எங்கள்

வாயலற, மனமலற,
மனவமைதி குலேகின்ற
மறுக்கம் நீக்கித்

தூயவளே! உனதுவிழிச்
சுடரருளால் மணவாழ்வு
துலக்கு வாயே!

சிவபெருமான்

கண்ணுதலே! எம்குலத்துக்
காரைக்கால் அம்மைக்குக்
கனிகள் தந்தாய்!

பின்னுமொரு இயற்பகைக்கும்
அருள்தந்து அளப்பரிய
பெருமை சேர்த்தாய்!

வண்ணமிகு அறம் வளர்த்த
நகரத்தார் தங்குலத்தில்
வந்த தல்லால்

என்னபிழை யாம்செய்தோம்?
எங்களேயேன் வெந்துயரில்
இடறச் செய்தாய்?

எவ்வுயிர்க்கும் அப்பன் என
ஈ எறும்பும் காத்திடும்உன்
இயல்பும் பொய்யோ?

செவ்வியநல் மண மாலே
பெறஅறியும் வழிசிறிதும்
தெரியா தெம்மைக்

கவ்விவரும் வினைத் துயரை,
கன்னியரின் மனத்துயரைக்
கடிதில் நீக்கி

கொவ்வையிதழ் நங்கையரின்
குறைகள்கேட் டருளக் கை
கூப்பினேனே!

திருமால்

விண்ணளந்து மண்ணளந்த
பரந்தாமா! பாண்டவரை
வெல்லச் செய்த

கண்ணளந்தால் எந்துயரம்
காற்றுகப் போகாதோ?
காலம் யாவும்

பொன்னளந்து, பெண்கொடுக்கும்
புன்மையெலாம் தீராதோ?
புலனே யீர்க்கும்

தண்ணளந்த குழலிசையாய்!
தரமளந்த மாயவனே!
தயைசெய் வாயே!

வஞ்சியொரு பாஞ்சாலி
மயங்கியழ, வேற்றவையில்
மானம் காத்தாய்!

கொஞ்சமில்லை நகரத்தார்
குலத்துதித்த கன்னியர்கள்
குமுறி நாளும்

கெஞ்சுவதும் கேட்கிலையோ?
சீர்வரிசை கேட்கின்ற
கிழ்மையாலே

நெஞ்சொடியும் கன்னியரின்
நீள்விழிநீர் நீக்கக்கை
நீட்டு வாயே!

சுப்பிரமண்யர்

காக்கின்ற கண்களொரு
ஈராறும், பன்னிரண்டு
கரமும், நெஞ்சை

ஈர்க்கின்ற புன்னகையும்,
இருவினைகள் களைந்தெறியும்
இயல்பும், இன்பம்

சேர்க்கின்ற தண்ணருளும்,
செவ்வேலும் கைக்கொண்ட
திருவே! எம்மைத்

தீய்க்கின்ற சீர்வரிசைச்
செயல்கொன்று மணம்காணும்
திறம்காட் டாயோ?

தண்டெடுத்த தனிமுதலே!
தமிழ்வடிவே! பெருங்கருணைத்
தடமே! நாங்கள்

கண்டெடுத்த ரெத்தினமே!
கதிரேசா! உன்கழலே
கதியென் றெண்ணிக்

கொண்டடுத்த நகரத்தார்
குலக்கன்னி மனக்கலக்கம்
கொன்றே காவில்

வண்டடுத்த மலர்மாலை
மணமாலை தனியருளி
வாழ்விப் பாயே!

பொது

கும்பிட்டோம் தெய்வதம்காள்! குமரிமுதல்
இமயம்வரை கோவில்கட்டி

செம்பொனளித் தறப்பணிகள் திருப்பணிகள்
பலப்பலவாய்த் தினமும் செய்தே
நம்பியுமைப் பணிகின்ற நகரத்தார்
குலப்பெருமை நலிவுறாமல்,

வெம்பிமனம் கலங்கியழும், கன்னியர்க்கே
மணமாலை வேண்டினோமே!

பணம்அருள வேண்டவில்லை, பலம்அருளக் கேட்கவில்லை,
பண்பின் மிக்க

குணமிகுநல் நகரத்தார் குலத்தினிலே
சீர்கேட்கும் கொடுமைமிக்க

மனநிலையை மாற்றுவிப்பீர்! மங்கையர்க்கு
வாழ்வளிப்பீர்! மறுவில்லாமல்

இனம்வளரக் குலம்வளர இன்னருளைப்
பெய்திடவே இறைஞ்சினோமே!

— மு. நா. நாராயணன்
காரைக்குடி

பெண்ணாசை படுத்தும்பாடு!

ஆசைகளில் மூன்று வகை உண்டு. அவை: மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையாகும். இந்தப் பெண்ணாசை இருக்கிறதே அது மிக மோசமானது. துறவறம் மேற்கொள்ளும் எண்ணத்தில் ஒரு கல்லூரி மாணவன் ஒரு குருவிடம் பயிற்சி பெற்று வந்தான். பயிற்சியின்போது சாப்பாட்டு ஆசை, அப்பா பாசம், அம்மா பாசம் ஆகியவற்றைத் துறந்தான். பின் ஒருநாள் குருவிடம் வந்து ''குருவே நான் துறவறத்தைத் துறந்து விட்டேன்'' என்றான். குருவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. ''என்னடா? என்ன சொல்கிறாய்? ஏன் துறந்தாய்?'' என்று கேட்டார். அவன் ''என் அத்தை மகளைப் பார்த்து விட்டேன். அதனால்தான்'' என்றான். ''எங்கே அந்தப் பெண்?'' என்று கேட்டவாறே குரு அந்தப் பெண்ணைப் பார்த்தார். ''இந்தப் பெண்ணைப் போல ஒரு பெண்ணைப் பார்த்தால் சொல். நானும் சம்சாரி ஆகிவிடுகிறேன்'' என்றார். இப்படிப் போய்க்கொண்டிருக்கிறது காலம்.

— பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம்.

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் கூறியது.)

உங்கள் குரல்

பட்டினத்தடிகள் திருவிழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிட்ட செப்' 89 இதழ், காவிரிப் பூம்பட்டினம் சென்று பார்க்க வேண்டிய குறையைத் தீர்த்து வைத்தது. நீதிமன்ற நிகழ்ச்சியில் இடம் பெற்ற உரையாடல்கள் சுவையாக உள்ளன.

— கனகு சுப்பு
கல்யாணி கணேசன்
நன்னிலம்

செப்' 89 குரலைப் படித்த போது பட்டினத்தார் திருவிழா நிகழ்ச்சிகளை நேரில் கண்டது போல இருந்தது. அறிஞர், கவிஞர் பெருமக்கள் உதிர்த்த முத்துக்களும் கருத்துக்களும் இதயப் பெட்டகத்தில் இருப்பாக இருக்கின்றன. குரலின் பணி மகத்தானது.

ஆர்எம். சொக்கலிங்கம்
செட்டியார், மன்னார்குடி.

''நகரத்தார் குரல்'' செப்' 89 இதழில் வெளிவந்திருக்கும் ''விடுதலை யாருக்கு?'' என்ற நீதி மன்ற நிகழ்ச்சியை இரு முறை படித்தேன். களிப்புற்றேன். சரித்திர நாடகத்தைப் பார்த்த உணர்வு ஏற்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நல்ல மதிப்பீடு. மணி விழாக்களில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றால் ஆடவரும் பெண்டிரும் பார்த்து மட்டிலா மகிழ்ச்சியடைவர்.

ஆ. நடராசன் செட்டியார்
வெற்றியூர்.

காவிரிப்பூம்பட்டினம் சென்றுவர முடியவில்லையே என்று நான் கவலை கொண்டிருந்தேன். உங்கள் செப்' 89 இதழ் அக்கவலையைத் தீர்த்து வைத்து விட்டது. செப்' 89 இதழுக்கு மட்டும் ஐந்து ரூபாய் கொடுக்கலாம்.

கண. நாச்சியப்பன்
திருச்சி

செப்' 89 ''குரல்'' பார்த்தேன்; படித்துமகிழ்ந்தேன். ஒரே வியப்பு. உங்கள் துணை ஆசிரியர் எப்படித்தான் அவ்வளவு செய்திகளையும் சேகரித்தாரோ?

வி. சுப்பிரமணியன்
திண்டுக்கல்

செப்' 89 இதழை முழுமை மையாகப் படித்தேன். ஒரு செய்தி கூட போரடிக்கவில்லை. மாறாக படிக்கப் படிக்க ஆர்வம் ஏற்பட்டது. வண்ணப் பூச்சிட்டு அச்சாகியுள்ள செய்திகள் காலத்தால் அழியாதவை. ''நகரத்தார் குர''லை மிஞ்ச வேறு நகரத்தார் பத்திரிகை இல்லை.

சோம. கண்ணப்பன்
சென்னை

செப்' 89 ''நகரத்தார் குரல்'' கண்டோம். காவிரிப்பூம் பட்டினத்துச் செய்திகள் ஒளிப் படங்களுடன் பொலிவாக அமைந்துள்ளது. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து படைத்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி. திருவிழாவை நேரில் கண்ட நிறைவு பெற்றோம்.

— கவிஞர் சேது. அருணாசலம்
தேவகோட்டை

திருமணம்

ஒக்கூர் சிக. கரு. கண. கரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியத்திற்கும் கீழப்பூங்குடி நா. லெ. அரு. வயி. நாகப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வானைக்கும் 4-9-89 அன்று கீழப்பூங்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சிறிய குடும்பம்

கொல்லங்குடி உடையப்பன்

முப்பது ஆண்டுக்கு முன்பெல்லாம்
மூன்று குழந்தை போதுமென்று
முக்கோணச் சின்னம் போட்டு
மூன்றுடனே முடிக்கச் சொன்னர்.

குட்டையிலே கூடிப் பல்கும்
கொசுக்களாய் மக்கள் கூட்டம்
கட்டின்றிக் கூடக் கூடக்
கஷ்டங்கள் கூடக் கண்டார்.

கணவன் மனைவி நாமிருவர்
களித்து வாழ நமக்கிரண்டு
கணக்காய்ப் பெற்று நாம்வாழ்ந்தால்
காண்போம் கோடி நன்மையென்ருர்.

இரண்டு தானே கண்நமக்கு
இதனுல்த் தானே அதன்மதிப்பு
சுருண்டு நிறைந்த தலைமுடிக்கும்
சுழலும் விழிபோல் மதிப்புண்டோ?

இரண்டும் அதிகம் இன்ருச்சு
ஒன்றே போதும் என்ருச்சு.

படித்த மக்கள் உணருகின்ருர்
பழக்கப் படுத்தி உயருகின்ருர்
படிப்பே இல்லாப் பட்டிகளிலே
பாமர மக்கள் பாவமந்தோ.

கடவுள் கொடுப்பது பிள்ளையன்று
கட்டுப் படுத்தல் பாவமென்று
இடுகிற கோழி முட்டையென
இட்டம் போல பிள்ளைகளை

பெற்று வளர்க்க வழியுமின்றி
பிணிகள் பரவப் பழியாக்கிக்
குற்றம் புரியும் நிரபராதிப்
பெற்ருேர் தம்மைத் திருத்திடவே

முதியோர் கல்வி மூலம்நாம்
மூடக் கொள்கை மூழ்கடிப்போம்
விதியால் பிறக்கும் குழந்தையென்ற
விளங்கா கருத்தை விலக்கிடுவோம்

குழந்தை தோன்றும் விழிமூடி
கூடிக் குலவும் வழிகூறி
வளரும் மக்கள் தொகைதடுப்போம்
வாழ்வில் மகிழ்ச்சி மலர்தொடுப்போம்

அளவாய்ச் சிறிய குடும்பங்கள்
அழகாய் மலரக் கிராமங்கள்
வளமாய் வளர்த்துப் பாரதத்தை
வையம் புகழ உயர்த்திடுவோம்.

(2-6-89 அன்று சென்னை தொலைக்காட்சியில் பாடியது)

திருமணங்கள்

குளிபிறையைச் சேர்ந்த, ஆடிட்டர் பெரி. தியாகராஜ் அவர்கள் புதல்வி செல்வி சீதா லெட்சுமிக்கும் தேவகோட்டை முக. பெரி. மு. வீரப்ப செட்டி யார் அவர்கள் பேரனும் கோலா லம்பூர் வி. கனகசபை செட்டி யார் அவர்கள் புதல்வனுமான செல்வன் சண்முகம் B. Sc. (Eng-London) க்கும் மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 7-9-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி நடைபெற்ற வாழ்த்தரங்கிற்கு தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலை செட்டியார் அவர் கள் தலைமை தாங்கினார்கள். முனைவர் திருமதி இராதா தியாக ராசன், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி னர். மணமகன் திரு. சண்முகம் நன்றி கூறினார்.

ஃ ஃ ஃ

குருவிக்கொண்டான்பட்டி பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பௌத்ரியும் பழநியப் பன் அவர்களின் புதல்வியுமான செல்வி மீனாள் என்ற நாச்சம் மைக்கும் பனையப்பட்டி செ. சு. பழ. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B. Com. க்கும் குருவிக்கொண்டான்பட்டியில் 3-9-89 ஞாயிறன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

வேந்தன்பட்டி பழ. மெ. சோம. பிச. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அடைக்கம்மை என்கிற டாக்டர் அமுதரெத்தினம் M. B. B. S. க்கும் ஒ. சிறுவயல் மு. பெரி. லெ. திருஞானசம்பந் தம் செட்டியார் அவர்கள் புதல் வன் செல்வன் அழகப்பன் B Com. A. C. A. க்கும் வேந்தன் பட்டியில் 4-9-89 அன்று திரு மணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

நாட்டரசன்கோட்டை வீர. சுப. லெ. கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B. Com க்கும் அலவாக்கோட்டை எஸ். சுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வசந்தி B. Sc., B. Ed க்-கும் அலவாக்கோட்டையில் 10-9-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

நடராசபுரம் உ. ராம. கண பதி செட்டியார் அவர்கள் புதல் வன் செல்வன் உடையப்பனுக் கும் அலவாக்கோட்டை சிந. சி. நா. கருப்பன் செட்டியார் அவர் கள் புதல்வி செல்வி சௌந்தர வள்ளிக்கும் 12-9-89 அன்று அலவாக்கோட்டையில் திரு மணம் சிறப்பாக நடைபெற்றது.

வேந்தன்பட்டியில் திருவிளக்குப் பூஜை

வேந்தன்பட்டி நகரத்தார் கள் சார்பில் அருள்மிகு நந்தி கேஸ்வரர் கோவிலில் 11-8-89 இரவு 7 மணி அளவில் ஆடி வெள்ளி விழாவும் திருவிளக்குப் பூஜையும் சிறப்பாக நடைபெற் றன. திரு. கனகசபை செட்டியா ரும், திரு. ரெத்தினம் செட்டி யாரும் வரவேற்றார்கள். அப் போது திருவிளக்குப் பூஜையின் மகிமையையும், பெண்களின் மாண்பையும் விளக்கும் வகையில் ''ஒளியே! உயிரே!'' எனும் தலைப்பில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் இலக்கியப் பேருரையாற்றினார்.

முதலாண்டு நினைவு அஞ்சலி



அ. க. மு. முத்தையா செட்டியார்

அண்ணாநகர், சென்னை-40.

இவ்வுலகில் நேரத்தைப் பொன்னாகப் போற்றி கடமை ஆற்றி எங்களிடத்தில் அன்பும், பாசமும் கொண்டுவாழ்ந்து வந்த தங்களை, எந்நாளும் நினைவில் கொண்டு வாழும் நாங்கள், தங்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துகிறோம்.

இப்படிக்கு

ஏகம்மை ஆச்சி (மனைவி)
முத்துக் கருப்பன் (மகன்)
சுப்பிரமணியன் (மகன்)
செல்வம் (மகன்)
இந்திரா (மகள்)
அணா. சுப்பிரமணியன் (மாப்பிள்ளை)
கல்யாணி (மருமகள்)
மீனாட்சி (மருமகள்)
அழகு (பேரன்)
கார்த்தி (பேரன்)
ஷோபனா (பேத்தி)

ஆசிரியருக்குக் கடிதம்

நம்மினத்தில் திருமணங்களின் போது மற்ற நகைகளோடு கழுத்து உருவை மிக முக்கியமானதாகவும் பெரிய நகையாகவும் கருதித் தொன்று தொண்டுச் செய்து வருகின்றனர். பொதுவாக அந்தக் கழுத்து உருவைப் பெண்கள் வெளியூர்களுக்குச் செல்லும்போதோ திருமணம் அல்லது திருவிழாக்களுக்குச் செல்லும்போதோ அணிந்து கொள்வதில்லை. பெரும்பாலும் அது பெட்டிக்குள்ளேயே தூங்கிக் கிடக்கும். நம் பெண்கள் அவர்களது திருமணங்களிலும் அவர்களது மணி விழாக்களிலும் அண்ணன், தம்பிகள் திருமணங்களில் நாத்தனூர் என்ற முறையிலும் மட்டுமே அந்தக் கழுத்து உருவை அணிந்து கொள்கிறார்கள். வாழ்வரசியாக இறந்த பெண்களுக்குப் படைக்கும் சமயம் அதைப் பயன் படுத்துகின்றனர்.

ஆனல் இளையாற்றக்குடிக் கோயில் கழனிவாசல்குடி பிரிவினரில் வேகுப்பட்டி, வலையபட்டி, பூலாங்குரிச்சி, கொப்பனபட்டி, இராங்கியம், குளிபிறை, குருவிக்கொண்டான்பட்டி, விரையாச்சிலை, கண்டவராயன்பட்டி, ஆகிய 9 செட்டிநாட்டு ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியம் அருள்மிகு வளத்தியம்மனுக்குப் படைக்கிற போது நம் பெண்களுடைய கழுத்து உருக்களை ஒருசேர வைத்துப் படைத்து வருகிறார்கள். அப்படிப் படைத்து வருகிறவர்களை வளத்திஅம்மனும் செல்வச் செழிப்போடு வளர்த்து வருகிறாள். அதுபோல் மற்றவர்களும் அவரவர் விரும்பும் தெய்வங்களுக்குப் படைக்கிறபோது இந்தக் கழுத்து உருக்களைப் பயன்படுத்தி மேலும் அருளும் பொருளும் பெறலாமே!

பி. எல் கல்யாண சுந்தரம்
வேகுப்பட்டி

புரியாதவை!

அண. அண்ணாமலை பி. ஏ., சென்னை

எண்ணமே எண்ணமே கொஞ்சம் நில்!
நீ எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுவதேன் சொல்
மனமே மனமே கொஞ்சம் நில்!
நீ மாறாத சோகத்தைத் தருவதேன் சொல்
மணமே மணமே கொஞ்சம் நில்!
நீ மறையாத இன்பம் தருவதேன் சொல்
காற்றே காற்றே கொஞ்சம் நில்!
நீ காணாத கனவைக் காட்டுவதேன் சொல்
அன்பே அன்பே கொஞ்சம் நில்!
நீ அகலாதிருப்பதேன் கொஞ்சம் சொல்
உறவே உறவே கொஞ்சம் நில்!
நீ நெருங்கிய விதத்தின் உண்மையைச் சொல்

ஆசிரியருக்குக் கடிதம்

செப்' 89 ''நகரத்தார் குரல்'' இதழில் காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாச் செய்திகளை ஏராளமாக வெளியிட்டிருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி.

'ஸ்ரீ ராஜ நாராயணப் பெருமாள் கோயில்' என்ற தலைப்பில் 15, 16 ஆம் பக்கங்களில் வெளியிட்டிருக்கும் நேர்முகக் கட்டுரை பற்றி சில செய்திகளைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

நகரத்தார்களுடைய திருமண இசை குடிமானத்தில் வரும் 'ராஜ நாராயணபுரம்' காவிரிப் பூம்பட்டினம் அருகே இருந்ததாக பட்டாச்சாரியார் திரு. ரெங்காச்சாரி கூறியிருப்பது சரியல்ல.

அடியேன் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தவன். இரணியூர்க் கோயில் எங்களுக்குச் சகோதரத்துவம் உடையது. எங்கள் இரு கோயில்காரர்களுடைய திருமண இசைகுடிமானத்தில் தான் ராஜ நாராயணபுரம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. 'ராஜ நாராயணபுரம்' என்பது பிள்ளையார்பட்டியைக் குறிக்கும்.

அமரர் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் எழுதி வெளிட்டுள்ள ''பிள்ளையார் பட்டி தல வரலாறு'' நூலில் பக்கம் எண் 9ல் இன்று நாடறிந்த பிள்ளையார்பட்டிக்கான வேறு பெயர்கள்: 1. ஈக்காட்டூர் 2. மருதங்குடி, 3. திருவீங்கைக்குடி, 4. திருவீங்கைச்வரம் 5. இராஜ நாராயணபுரம் என்று ஐந்து பழம் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப் பெற்றுள்ள கல்வெட்டு எண் 5ல் 7, 8 ஆவது வரியில் இராஜ நாராயணபுரம் குறிப்பிடப் பெறுகிறது. (பக்கம்-42)

கல்வெட்டு எண் 9ல் நகரத்தார் நாட்டார்களிடம் நிலம் புலம் வாங்கியமையும் இராஜ நாராயணபுரம் நகரமைக்கப் பட்டதையும் குறிப்பிடுகிறது. (பக்கம் எண்-50)

மேலும் சா. க. அவர்களே பிள்ளையார்பட்டிக் கோயில் நகரத்தார் இன்றும் தமது இசை குடிமானத்தில் 'மருதங்குடியான இராஜ நாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்' என்ற சொற்றொடரை ஆண்டு வருவது ஒப்பிடத்தக்க உணர்வாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்க ஐயா அவர்கள் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றி வெளியிட்டுள்ள ''சோழபுராணம்'' தல வரலாற்றில் செய்யுட்கள் 17, 19, 20ல் ராஜ நாராயணபுரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே 'ராஜ நாராயணபுரம்' என்பது மருதங்குடியான நாடறிந்த பிளளையார் பட்டியை -யே குறிக்கும்.


தங்களன்புள்ள

குப. சொக்கலிங்கம்

நாட்டரசன்கோட்டை

திருமணம்

ஒக்கூர் சித. அரு. சித. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் வீரப்பனுக்கும் நாட்டரசன்கோட்டை சி. கரு. நா. வயி. வயிரவன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி காளியம்மை என்கிற சந்தானலெட்சுமிக்கும் 3-9-89 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் (12-8-89) ஞானகலாம்பிகை பரிபூரணமடையும் காட்சியில் பேரனுக திரு. பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார், மருத்துவராக திரு. பிஆர். அருணுசலம், உதவியாளராக திரு. சொ. பழநிமலை, பயிற்சி மருத்துவராக செல்வன் செந்தில் நடித்த காட்சி.

சிருங்கேரி மகா சுவாமிகள் முக்தியடைந்தார்

சிருங்கேரி (கர்நாடக மாநிலம்) ஸ்ரீ சாரதா பீடம் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த சங்கராசார்ய சுவாமிகள் 21-9-89 காலை தமது 73ஆவது வயதில் சிருங்கேரியில் முக்தி அடைந்தார்கள். 21-9-89 காலை பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்த பின் மயங்கி விழுந்த சுவாமிகளுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. சுவாமிகளது இயற்பெயர் சீனிவாசன் என்பதாகும். 22-5-1931ல் இவர்களுக்கு சன்யாச தீட்சை வழங்கப்பட்டு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தர் என்ற பட்டம் சூட்டப் பெற்றது. 16-10-1954ல் ஸ்ரீ சந்திர சேகர பாரதி முக்தி அடைந்தபின் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35 ஆவது அதிபராக இவர்கள் பீடமேற்றுர்கள்.

கட்டுரையில் சேர்க்கை

''நகரத்தார் குரல்'' ஆகஸ்ட்' 89 இதழில் முனைவர் லெட்சுமி மீனுட்சி சுந்தரம் அவர்கள் எழுதியுள்ள ''நாவல் இலக்கியமும் நகரத்தார்களும்'' என்ற கட்டுரையில் உ. அ. அருணுசலம் செட்டியார் அவர்கள் 1938ல் ''உத்தமநாதன் அல்லது சத்திய புரி ஜமீந்தார்'' என்ற நாவலை எழுதியுள்ளார்கள்- என்ற செய்தியைச் சேர்த்துக் கொள்ளுமாறு அவர்கள் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறுர்கள்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணுபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: திருநெல்வேலி-627006 தொலைபேசி: 3474

நிர்வாக அலுவலகம்: பள்ளத்தூர்-623107 தொலைபேசி: 72&108

மத்திய அலுவலகம்: சென்னை-600 002
தொலைபேசி: 869344 & 867886

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான
ஒப்பற்ற சீட்டு நிறுவனம்

4 மாநிலங்கள் 70 கிளைகள் 41 ஆண்டு சேவை

நிதி நிலைமை 31-3-88ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப்பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும்	ரூ. 11. 41 லட்சம்
ஆஸ்திகள்	ரூ. 24. 92 கோடிக்கு மேல்
சீட்டு நடைமுறை நிதி	ரூ. 32 10 கோடிக்கு மேல்

டைரக்டர்கள் : AR. விஸ்வநாதன்
S. Pr. ராமஸ்வாமி M. A.

எங்கள் 70 கிளைகள் மூலமாக பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒரு முறை, இரு முறை, மும்முறை. தினசரிச் சீட்டுகள் நடத்தி வருகிறோம். மேலும் ரூ. 25,000/- முதல் ரூ. 5, 00. 000 - வரை உயர் மதிப்புள்ள சீட்டுகளைப் பிராந்திய குருப்புகளாக எங்கள் சென்னை மத்திய அலுவலகம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி பெங்களூர், காரைக்குடி, பாண்டிச்சேரி [illegible] நடத்தி வருகிறோம்.

Dr. L. RM. அருணாசலம் B. E., M. E., (PH) [illegible] RM. அருணாசலம்
பொது ஜன தொடர்பு அதிகாரி — நிர்வாக இயக்குநர்

AR. பழநியப்பன்
நிர்வாக அதிகாரி

நகரத்தார் குரல்

விளம்பர விவரம்

அட்டை (வெளிப் பக்கம்)	ரூ. 500-00
அட்டை (உள் பக்கம்)	ரூ. 300-00
முழுப் பக்கம்	ரூ. 150-00
அரைப் பக்கம்	ரூ. 75-00
கால்ப் பக்கம்	ரூ. 40-0

மணமகன் தேவை, மணமகள் தேவை. சுவீகாரம் போன்ற விளம்பரங்கள் பாதிக் கட்டணத்தில் வெளியிடப்பெறும்.

தொடர்ந்து 12 மாதங்களுக்கு மேல் வெளியிடப் பெறும் விளம்பரங்களுக்குக் கட்டணத்தில் சலுகை உண்டு.

மணி விழா, திருமணச் செய்திகள் ஒளிப்படத்துடன் வெளியிட (அரைப் பக்கம்) கட்டணம் ரூ. 50-00

சந்தா விவரம்

ஓர் ஆண்டு	ரூ. 24-00
டெபாசிட் சந்தா	ரூ. 200-00

ஓர் ஆண்டுக்குக் குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சந்தாத் தொகையை M O மூலமும் பாங்க் டிராப்ட் மூலமும் அனுப்புபவர்கள் முழு முகவரியுடன் சென்ற ஆண்டு தொகை செலுத்தியதற்கான இரசீதின் எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்; அல்லது எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு :

"நகரத்தார் குரல்"
25 வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001